திருவெம்பாவை

(பதவுரை, பொழிப்புரை விளக்கம்
உள்ளுறை பொருளுடன்)

THE MADURA TAMIL SANGAM

பி. ஸ்ரீ.

அறிவே விளக்கு
அல்லயன்ஸ்

அல்லயன்ஸ் கம்பெனி
தபால் பெட்டி நெ. 617,
மயிலாப்பூர் :: சென்னை-4

உரிமை பதிவு நவம்பர் 1955

ரூ. 1-8-0

அல்லயன்ஸ் பிரஸ், மயிலாப்பூர், சென்னை-4

பதிப்புரை

திருவெம்பாவை, மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகத்தின் ஓர் அருமையான பகுதி யாகும். மார்கழி மாதம் திருவாதிரைதொட்டு முன் பத்து நாட்களில் அதிகாலைப் பொழுதில் திருவெம் பாவைப் பாடல்களைச் சிவபக்தர்கள் ஓதி இன்புறுவது வழக்கம்.

மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நாளுக்கு முன் ஒன்பது நாளும் திருவெம்பாவை மகோத்சவ நாளாகும். ஸ்ரீ நடராஜப் பெருமான் பவனிவரும் திரு வாதிரை நாளன்று முதன் முதல் திருவெம்பாவைப் பாடல்களை ஓதியே திருமுறைகளை ஓதுவார்கள்

திருவெம்பாவைப் பாடல்கள் தமிழிலக்கியப் பூஞ்சோலையில் ஓர் இன்னிசைப் பூங்கொத்தாகத்திகழ் வதால் சைவரல்லாத தமிழ்ப் பெருமக்களும் ஓதி ஓதி இன்புறத்தக்கன. தமிழர் பண்பாட்டை அறிந்து கொள்வதற்குத் திருவெம்பாவையும் ஒரு சிறந்த சாதனமாகும்.

இப்பாடல்கள் இருபதும், சீர் பிரித்துப் பதவுரை விளக்கவுரைகளுடனும் உள்ளுறை பொருளுடனும், பலரும் படித்துப் பொருள் உணர்ந்து பயன் துய்க்கும் வண்ணம் அச்சிடப்பெற வேண்டும் என்பது பல வருஷங்களாக நாங்கள் கொண்டிருந்த ஆசை. அந்த ஆசை இப்போது நிறைவேறுவது குறித்து எங்களுக்கு உள்ளபடியே பெருமகிழ்ச்சி ஏற்படுகிறது.

இந்தத் தமிழ்த் தொண்டையும் சிவத்தொண்டையும் தமிழ் மக்கள் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

போற்றியாம் உய்யஆட்
கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீ
ராடேலோர் எம்பாவாய்.

பதிப்பகத்தார்

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்

தமிழகத்திலே தமிழ்நாடு என்னும் சிறப்புப் பெயருக்கு உரிய பாண்டிய நாட்டில் திருவாதவூரில் மாணிக்கவாசக சுவாமிகள் தோன்றினர். வாதவூரர் என்பது இவரது பிள்ளைத் திருநாமம்.

அக்காலத்தில் மதுரைமா நகரிலிருந்து பாண்டிய நாட்டைஆண்டுவந்தஅரசனை அரிமர்த்தன பாண்டியன் வாதவூரரின் கல்வித்திறனையும் அறிவுத்திறனையும் கேள்வியுற்று இவரைத்தனக்கு முதல்அமைச்சராக்கிக் கொண்டான். இந்த அமைச்சருக்குத் 'தென்னவன் பிரமராயர்' என்னும் பட்டமும் சூட்டிவைத்தான். 'தென்னவன்' என்றால் பாண்டியன்; 'பிரமராயர்' என்றால் அறிவின் அரசர்; பாண்டியனால் கௌரவிக்கப் பெற்ற 'ஞானராஜா' என்பது பட்டப் பெயரின் பொருள்.

இந்தப் பெரிய பதவியை 'எல்லாம் இறைவனுடைய அருள்' என்ற மனப்பான்மையுடன் வாதவூரர் ஏற்றுக்கொண்டு அரசனுக்குக் கண்ணும் கவசமுமாயிருந்தார். நமது பிரமராயர் குடிகளுக்குத் தாயாக

உதவினர். உள்ளத்தைச் சிவபக்திக்கும் தம் கைகளை கடமைக்கும் உரிமையாக்கினர். இவர் அறிவு மெய்யறிவாக வளர்ந்து கொண்டே வந்தது.

இந்த நிலையில் அரசன் தன் குதிரைப் படையைப் பலப்படுத்த எண்ணினன். கடல்-துறையில் நல்ல குதிரைகள் வந்து இறங்கியிருக்கும் செய்தி தெரிய வந்தது. பாண்டியன் தன் பொக்கிஷத்திலிருந்து வேண்டிய திரவியங்களை எடுத்துக்கொண்டு அமைச்சர் பெருமான் தனக்கு வேண்டிய குதிரைகளை வாங்கிக் கொண்டு வரவேண்டுமென்று விரும்பினன். அப்படியே பிரமராயரும் ஒட்டகங்களின்மீது திரவியங்களை ஏற்றிக்கொண்டு படைகள் பரிசனங்கள் சூழக் குதிரை கொன்னப் புறப்பட்டார்.

மதுரை விட்டுச் செல்லுமுன் சொக்கலிங்கப் பெருமானின் மகாசன்னிதானத்திலே வணங்கி நின்று, 'அடியேனுக்குச் சற்குருவை அருள வேண்டும்' என்று பிரார்த்தித்துக் கொண்டார். பிறகு பல காதங்கள் கடந்து திருப்பெருந்துறை என்னும் துறைமுகத்திற்குச் சென்றார். அங்கே ஒரு சோலையில் சிவாகம ஓசைகேட்டு விரைந்து போனர். அச்சோலையில் குருந்த மரம் ஒன்றின் அடியில் குருமூர்த்தி ஒருவரையும், மாணவர் கூட்டங்களையும் கண்ணுற்றுப் பிரமராயர் பரவசமாகி, திவ்ய தேஜோமயமாய்க் காட்சி அளித்த குருநாதரின் திருவடிகளில் அடியற்ற மரம் போல விழுந்து வணங்கினர். 'ஆட்கொள்ள வேண்டும்' என்று பிரார்த்தித்தார்.

வாதவூரரின் அதிதீவிர பக்குவ நிலைகண்டு ஆசாரியமூர்த்திகளும் ஆட்கொண்டருளினர். பிரமராயர் மனங் கசிந்து உருகி ஆசாரிய மூர்த்தியைத்

துதிப்பாராயினர். இவர் செய்த தோத்திரமாகிய திருவாசகங்கள் அருட் பிரகாசத்தோடு விளங்கின என்று கருதிய ஞானசாரியர் இவருக்கு 'மாணிக்க வாசகன்' என்று தீட்சாநாமம் சூட்டினர். இந்த நிலையில் இவர் ஆசாரியமூர்த்தியை நோக்கி, 'அடியேன் கொண்டு வந்த இப்பொருள்க ளெல்லாம் தேவரீருக்கும் அடியார்களுக்கும் உபயோகமாக வேணும்' என்று விண்ணப்பித்துக்கொண்டு, அப் படியே அப்பொருள்களை அடியார் பூஜை, மகேச்வர பூஜை, நந்தவன கைங்கரியம், கோயிற்பணிகள் முதலான தொண்டுவகைகளில் தாராளமாக வினியோகித்து விட்டார்.

குதிரை வாங்கக் கொணர்ந்த பொருளை இப்படி யெல்லாம் செலவிட்டுக் கொண்டிருந்த மாணிக்கவாச கருக்கு, குதிரைகளுடன் மதுரை செல்ல வேண்டுமே என்பதைக் கூடவந்திருந்த பரிஜனங்கள் நினை வூட்டிப் பார்த்தார்கள். பயன் ஒன்றும் ஏற்படாத தால் அவர்கள் மதுரைக்குத் திரும்பிப்போய் அரச னுக்கு அறிவித்தார்கள். அவன் கோபித்து, விரை வில் குதிரைகளுடன், அல்லது கொண்டு போன திரவியங்களுடன், பிரமராயர் மதுரைக்கு விரைந்து வந்து சேரவேண்டுமென்று திருமுகம் விடுத்தான்.

'ஆவணி மூலத்தன்று நாமே குதிரைகளுடன் வருவோம்; நீ முன்னேபோய் அரசனுக்குத் தெரிவிப் பாய்' என்று ஆசாரியமூர்த்தி சொல்லவே, மாணிக்க வாசகர் மதுரைக்குத் திரும்பிவந்து அரசனிடம் அந்தச் செய்தியைத் தெரிவித்தார். அவனும் அதை நம்பி மகிழ்ச்சியுடன் இருந்தான். ஆனல் குறித்த காலம் கழிந்தும் குதிரைகள் வந்து சேரவில்லை.

அரசன் இவரைச் சிறைப்படுத்தி ஹிம்ஸித்துத் தன் பொருள்களை யெல்லாம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆத்திரப்பட்டான். ஆனல் உயிர்க்குயிராகிய இறைவனது அருளால் மாணிக்கவாசகர் அந்த ஹிம்ஸைகளையோ துன்பங்களையோ உணரவில்லை.

இறைவனே குதிரைச் சேவகனய் வேஷம் பூண்டு, காட்டுநரிகளைப் பரிகளாக்கிக்கொண்டு எழுந்தருளினன் என்பதை அரசன் எப்படி அறிவான்? குதிரைப் பந்திகளை மதுரையில் கண்டதும் அரசன் அமைச்சர் பெருமானை உடனே சிறை விடுவித்தான்; மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்; தன் பக்கத்தில் இருக்கச் செய்தான். பிறகு குதிரைச் சேவகர்களின் தலைவனை இறைவன் குதிரைகளை வையாளித் தெருவிலே நடத்திக் காட்டினன்; ஓட்டமும் காட்டினன்; ஆட்டமும் காட்டினன். அரசனது குதிரைப் பந்தியிலே அக்குதிரைகள் சேர்க்கப்பட்டன. குதிரைச் சேவகர்கள் சென்றபின், அரசன் அமைச்சர் பெருமானைப் பாராட்டி விடை கொடுத்தனுப்பினன்.

அன்று நள்ளிரவிலே நரிகள் ஊளையிட்டு மதுரை மாநகரைக் கலங்கச் செய்து விட்டன. அரசனுடைய கோபத்திற்கு அளவில்லை. மாணிக்கவாசகரைக் கடுஞ் சிறையில் வைத்து ஹிம்ஸிக்கும்படி அரசன் உத்திர விட்டான். அப்போது வைகையில் வெள்ளம் பெருகி நகர்மீது பரவியது. அரசன் பயந்து மாணிக்க வாசகரை உடனே விடுவித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். இவரோ குதிரைமேல் வந்த குருமூர்த்தியின் திருவடிகளைத் தியானித்தவண்ணம் வைகைக் கரையிலே போய் நின்ருர். வெள்ளப் பெருக்கு ஒருவாறு மட்டுப்பட்டது.

நகரமக்கள் எல்லாரும் வைகைக் கரையை அடைத்து வெள்ளத்தை அடக்கி வசப்படுத்தும் முறையில் தொண்டாற்ற வேண்டுமென்று கட்டளை பிறந்தது. ஒவ்வொருவருக்கும் கரையை அடைக்கும் வேலையில் பங்கு பிரித்து கொடுத்திருந்தார்கள். அந்த அந்த பங்குக் கரையை அவரவர் அமைப்பதில் ஈடுபடுவாராயினர். மாணிக்கவாசகரோ மன அமைதி யுடன் சிவயோக நிலையில் அமர்ந்திருந்தார்.

மதுரைமா நகரில் வந்தி என்ற கிழவி ஒருத்தி இருந்தாள். அவளுக்கு உற்றார் உறவினர் இல்லை. பிட்டு விற்று வயிறு வளர்த்து வந்தாள். மீனாட்சி மணாளனாகிய சொக்கன் திருவடிகளில் மாறாத அன்பு கொண்டிருந்தாள். நாள்தோறும் அவித்த பிட்டை மதுரேசனுக்கு நிவேதித்து அதை விற்று ஜீவித்துவந்த அந்தக் கிழவிக்கும் வைகைக் கரை யடைப்பு வேலையில் ஒரு பங்கு கிடைத்தது. இவளுக்கோ பழுத்த மூப்பு. அச்சமயம் கூலி ஆளும் கிடைக்கவில்லை. கிழவி இறைவனை நோக்கி முறையிட்டுக் கொண்டாள்.

அடியார்க்கு எளியன், உடனே மண் வெட்டியும் கூடையும் சுமந்துகொண்டு வந்து கூலியாகக் கொடுக் கும் பிட்டுக்கு மண் சுமந்து, அவள் பங்குக் கரையை அடைப்பதாக ஒப்புக்கொண்டான். கூலிப் பிட்டையும் வேலை செய்வதற்கு முன்பே பெற்றுக்கொண்டான், பிட்டைத் தின்று இளைப்பாறிக் கரை கட்டுவதாகச் சொல்லிப் போனான். அரசனுடைய ஏவலாளர்களிடம் 'நான் வந்தியம்மையின் ஆள்' என்று பதிவு செய்து கொண்டான்.

ஆனால் இக்கூலியாள் செய்ததென்ன? கூடை

மண்கொண்டுவந்து சும்மாடு விழும்படித் தட்டுவான்; ஓடுவான்; ஆடுவான்; பாடுவான். மறுபடியும் மற்ருெரு கூடை மண் கொண்டுவந்து உடைப்பில் கொட்டாத தால் அந்த மண்ணை ஆறு அடித்துக்கொண்டு போய் விடும். விரைவில் களைத்துப்போய்க் கூடையைத் தலையணையாக வைத்துக்கொண்டு ஆற்றங்கரை மர நிழலில் ஆனந்தமாய்ப் படுத்து உறங்குவான்;எழுந்து தண்ணீரில் குதிப்பான்; அமிழ்வான். மூழ்கி எழுந்த பின்மறுபடியும்களைத்துப்போய்ப் பிட்டு அருந்துவான்.

இந்த வேலையாள் தன் வேலையையும் செய்யாமல் பிறர் வேலைகளையும் கெடுக்கிருனே என்று கருதினர் அரசனின் ஏவலாளர்கள். ஆனுல் இந்தக் கூலி ஆளை உற்றுப் பார்த்ததும் அவர்களுக்கு இவனைக் கண்டிக்க வும் தோன்றவில்லை. அன்று மாலையில் அரசன் அடை பட்ட கரையைக் காண வந்தான். வந்தியம்மை பங்கு மட்டும் அடைக்கப்படவில்லை என்பதைக் கவனித் தான். அந்த உடைப்பின் வழியே நீர் பெருகி ஏற்கெனவே அடைக்கப்பட்டிருந்த பகுதிகளையும் அழித்துவிடுமே என்று எண்ணினுன்.

ஏவலாளர்கள் வந்தியம்மையின் கூலி ஆளைக் கையைப் பிடித்து இழுத்து வந்து அரசன் முன் நிறுத்திஞர்கள். கோப வெறியுடன் அரசன் இவன் முதுகிலே கைப்பிரம்பை ஓங்கி ஒரு அடி கொடுத் தான். உடனே கூலி ஆள் தன் கையிலிருந்த அந்த ஒரு கூடை மண்ணை அப்படியே உடைப்பில் கொட்டி விட்டு மறைந்துவிட்டான். உடைப்பு நிறைந்து அடைப்பாகிவிட்டது. ஆனுல் அந்த அடி—ஆம், அந்த முதுகில் விழுந்த அடிதான்—அரசன் முதுகிலே விழுந்துவிட்டது! அங்கே யிருந்த அதிகாரிகள்

மீதும் அந்த அடி விழுந்தது அந்த ஒரே காலத்தில். அரச பத்தினிக்கும் அந்த அடியில் பங்கு கிடைத்தது. ஏன், எல்லா உயிர்கள் மேலும் — கருவிலிருந்த உயிர்கள் மேலும் அடிபட்டது!

அரசன் பிரமித்துப் பின் அன்பர் பெருமையே பெருமை என்பதை உணர்ந்து கொண்டான். மாணிக்கவாசகருக்காக இறைவன் நரியைப் பரியாக் கினுன் என்பதையும், கிழவி வந்தியை ஆட்கொண்டு பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டான் என்பதை யும், மன்னன் அறிந்து கொள்ளும்படி அசரீரி எழுந்தது.

இப்படி நிலைமையை உள்ளவாறு தெரிந்து கொண்ட அரசன் சிவயோகத்திலே அமர்ந்திருந்த மாணிக்கவாசகரை அடிபணிந்தான். மாணிக்கவாசக சுவாமிகள் எம்பெருமானை வாழ்த்தி வணங்கினுர். 'தில்லையில் நம்பால் வருக' என்று பெருமான் கட்டளை யிடவே, மாணிக்கவாசகப் பெருமான் மதுரை நீங்கி வழியில் குருநாதரைத் தரிசித்துக்கொண்டு போக வேண்டுமென்று திருப்பெருந்துறையை நோக்கி விரைந்தார். அங்கே ஆசாரிய மூர்த்திகளைத் தொழுது அடியார் திருக்கூட்டத்தில் எழுந்தருளியிருந்தார்.

'நாம் வந்த காரியம் நிறைவேறியது' என்று சொல்லிவிட்டு குருமூர்த்தி திருகைலாயத்திற்குத் தாம் திரும்பவேண்டுமென்ருர். 'அடியார்கள் அனை வரும் அவரை விட்டுப் பிரிந்திருக்க முடியாதென்று அழுதார்கள்; தொழுதார்கள். அவர்களை நோக்கிக் குரு மூர்த்தி, 'பின் ஒரு நாளில் இந்தக் குளத்தில் நெருப்பு உண்டாகும்; அப்போது நீங்கள் மூழ்கி நம்மை அடை யுங்கள்' என்று கட்டளையிட்டுக் கைலையை நோக்கிச்

சென்றார். ஏனையோர் நின்ற பின்பும் மாணிக்கவாசகர் விடாது தொடரவே, குருமூர்த்தி ஒரு கொன்றை மரத்தடியிலே தங்கினார். மணிவாசகரை நோக்கி 'அன்பனே! ஏனையோர் தடாகத்தில் நெருப்பைக் கண்டு மூழ்கும்போது நீயும் உடன் மூழ்காமல் உத்தரகோச மங்கை என்னும் தலத்துக்குப் போகவேண்டும். அதன் பின் நீ செல்லும் தலங்கள் தோறும் இந்தக் குரு மூர்த்தமான திருவுருவத்தையே உனக்குக் காட்டுவோம். திருக்கழுக்குன்றத்தில் குரு தரிசனம் கண்டு வணங்கிப் பின்னும் இங்கே வந்து அதன்பின் சிதம்பரத்தை அடைவாய்!' என்று அனுக்கிரகித்தார்.

சிதம்பரம் போகும் வழியில் திருவண்ணாமலையை அடைந்தார். அங்கே அண்ணாமலையாரையும் உண்ணாமுலை யம்மையாரையும் வழிபட்டுக்கொண்டு தங்கியிருந்தபோது மார்கழி மாதம் வந்தது. மணம் செய்யப் பெறாத கன்னிப் பெண்கள் திருவாதிரைக்குப் பத்துநாள் முன் தொடங்கி விடியற் காலத்தில் துயிலுணர்ந்து எழுந்தார்கள். தங்களை ஒத்த கன்னிப் பெண்கள் உறங்கிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு வீட்டுக்கும் போய் அவர்களையும் எழுப்பிக்கொண்டார்கள். பிறகு எல்லோரும் சிவபெருமானின் அருட் செயலைப் பாடியவண்ணம் தாமரை தடாகத்திற்குப் போய் நீராடினார்கள். இவற்றை எல்லாம் மணிவாசகப் பெருமான் நேரில் கண்டார். அப்பெண்கள் கூற்றாக இவர் பாடியருளியதே திருவெம்பாவை.

அங்கிருந்து திருவேகம்பத்தை யடைந்து பிறகு திருக்கழுக்குன்றம் சேர்ந்து, கடைசியாய்த் தில்லையை அடைந்தார். அப்போது பௌத்த சமயத்தைச் சார்ந்த இலங்கை மன்னன் குருவோடும் தன் ஊமைப்

புதல்வியோடும் தில்லைக்கு வந்திருந்தான். அந்தப் புத்த குருவோடு மணிவாசகப் பெருமான் வாதஞ் செய்து வெற்றி பெற்றார்.

பிறகு சிவாநுபூதியில் திளைத்திருந்த மணிவாசகப் பெருமானிடம் ஒரு வேதியர் வந்து உம்முடைய 'மணிவாசகங்களை எழுத வந்தேன்' என்றார். உடனே சுவாமிகளும் அன்புடன் தாம் பாடிய திருவாசகத்தை முறையே ஓதிக் காட்டினார். வேதியரும் அப்படியே எழுதி வந்தார். இவர் பாடிய திருச்சிற்றம்பலக் கோவையையும் எழுதி முடித்தபின் வேதியர் மறைந்தார். நடராஜப் பெருமான் தமது திருநாமத்தை முடிவில் திருக்காப்பிட்டுத் திருவாசகத்தை அம்பலவாயிலில் வைத்தருளினார். இதை இப்படி எழுதி வைத்த வேதியர் நடராஜப் பெருமானே என்பது தெளிவாகி விட்டது.

மணிவாசகர் சொல்லச் சொல்ல தில்லைக்கூத்தர் எழுதி வைத்தாரே, அவ்வளவு பெருமை வாய்ந்த இத் திருவாசகத்தின் பொருளைத் தெரிந்துகொள்ள விரும்பினார்கள் அன்பர்கள் யாவரும். அப்போது மணிவாசகப் பெருமான் திருஅம்பலம் சென்று 'திருவாசகத்துக்குப் பொருள் இப்பெருமானே' என்று காட்டி அம்பலக் கூத்தனது திருவடிகளில் இரண்டறக் கலந்து சிவ ஸாயுஜ்யப் பெருவாழ்வை அடைந்தார். அது கண்ட அடியவர்கள் எல்லாரும் ஆனந்தப் பரவசராய் ஹர ஹர முழக்கம் செய்தார்கள்.

தென்னாடுடைய சிவனே! போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா! போற்றி.

டும் என்பதுமே; இதற்குத் திருப்பாவையும் திருவெம்பாவையும் ஒருங்கே சான்று தருகின்றன. இம்மைப் பயன் கருதிக் கன்னிப் பெண்கள் ஆதியில் நோற்ற மார்கழி நோன்பு ஆண்டாளாலும் மணிவாசகப் பெருமானாலும் ஈச்வர பரமாகப் பாடப் பெற்றிருக்கிறது என்று கருதுவது மிகையாகாது;

நாளொன்றுக்கு ஒரு பாட்டாகத் திருப்பாவை முப்பது பாடல்களும், வைணவர்களால் மார்கழி மாதம் முழுதும் ஓதப்படுகின்றன. சைவர்களோ திருவெம்பாவை இருபது பாடல்களையும் திருவாதிரைக்குப் பத்து நாட்களுக்கு முன்பு தொடங்கித் திருவாதிரை நாளிலும் ஓதுகிறார்கள். 'மார்கழி முழுதுமே நீராட்டத்துக்கு உரியதாயினும் திருவாதிரையே அதற்குச் சிறந்த நாளாக முன்னோர் எல்லோராலும் ஒருங்கு கொள்ளப்பட்டதென்றே தோன்றுகின்றது' என்பர் திரு. மு. ராகவய்யங்கார். திருவாதிரைத்திருவிழாவை மலையாள நாட்டினரும் முக்கியமாகக் கொண்டாடுகிறார்கள். இம் மார்கழி நீராடலைத் 'தைந்நீராடுதல்' என்று பண்டைத் தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன.

திருவெம்பாவை

திரு + எம் + பாவை — திருவெம்பாவை. இப் பாடல்களில் ஒவ்வொன்றும் 'ஏலோர் எம்பாவாய்' என்று முடிவு பெறுவதை அறியாதார் யார்? இப் பிரபந்தம் சைவத் திருமுறைகள் பன்னிரண்டில், எட்டாவது திருமுறையில் முதலாவதாகிய திருவாசகத்தில் காணப்படுகிறது.

திருவெம்பாவையில் முதல் பாதியில் துயிலெழுப்புவதையும், பின் பாதியில் நீராடுவதையும் காண்கிறோம். பெண்கள் துயிலெழப்பெறுவதை முதல் எட்டுப் பாடல்களில் கண்டு, அப் பெண்கள் சேர்ந்து இறைவனிடம் ஒரு விண்ணப்பம் செய்து கொள்வதை ஒன்பதாவது பாட்டிலும், நீர்நிலைக்குச் செல்வதைப் பத்தாவது பாட்டிலும் காண்கிறோம். இதற்கு மேலுள்ள பகுதியை 'நீராடும் பகுதி' என்று பொதுவாகக் குறிப்பிடலாம். பதினோராவது பாட்டு முதல் பதினெட்டாவது பாட்டு வரை நீராடி நிர்மலராய்ப் பத்தொன்பதாவது பாட்டில் நோன்பின் பயனாகிய வேண்டுகோளை வெளியிடுகிறார்கள். இருபதாவது பாட்டு இறைவனது திருவடிப் பெருமையைப் போற்றுவதாகும். இந்த இறுதிப் பாட்டு ஐந்தொழில் முதல்வனாகிய சிவபெருமானே எல்லாவற்றுக்கும் காவல் அல்லது காப்பாவார் என்பதை வற்புறுத்துகிறது.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணாமலையில் அருளிச் செய்த இத் திருவெம்பாவையைத் தமிழ் நாட்டிலுள்ள சிவாலயங்கள் தோறும் மார்கழித்

திருவாதிரை வரை பத்து நாளிலும் இருபது பாடல் களையும் ஓதுவது, இதற்கு உரிய முக்கிய ஸ்தானத்தை வற்புறுத்துவதாகும். 'மார்கழித் திருவாதிரைக்கு முதல் ஒன்பது நாளும் ஆன்மார்த்தம் பரார்த்தம் என்னும் இரண்டிலும் இத் திருவெம்பாவையே ஓதல் வேண்டும்; திருவாதிரையில் திருவெம்பாவையை ஓதிப் பின் வழக்கப்படி தேவாரம் முதலியனவும் ஓதல் வேண்டும்' என்று ஆறுமுக நாவலர் தமது 'சைவ வினு விடையில்' கூறியுள்ளார்.

எழுந்த கன்னியர் எழாத ஒரு தோழியை எழுப்புதல்

ஆதியும் அந்தமும்
இல்லா அரும் பெருஞ்
சோதியை யாம்பாடக்
கேட்டேயும், வாள்-தடங்கண்
மாதே! வளருதியோ?
வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள்
வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே,
விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல்
நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள்
கிடந்தாள்; என்னே! என்னே!
ஈதேஎம் தோழி
பரிசேலோர் எம்பாவாய். (1)

குறிப்பு :--மார்கழி நீராடலின் சிறப்பை உணர்ந்து திருவாதிரை நாளில் நீராடவேண்டுமென்று கன்னிப் பெண்கள் தம்முள் கலந்து தீர்மானித்தார்கள். அந்தத் தீர்மானத்தின்படி, திருவாதிரைநாள் அதிகாலையில் முன்னம் துயிலுணர்ந்தவர்கள் ஒரு தோழியைத் துயிலுணர்த்துவதற்காக அவள் பள்ளியறை வாசற் படியில் வந்து நிற்கிருர்கள். இறைவன் புகழைப் பாடித் துயிலுணர்த்துகிருர்கள்.

பதவுரை

ஆதியும் அந்தமும் இல்லா - தொடக்கமும் முடிவும் இல்லாத
அரும் பெருஞ் சோதியை-அரிய பெரிய ஒளியை
யாம் பாடக் கேட்டேயும், நாங்கள் பாடக்கேட்டும்,
வாள் தடங்கண் மாதே!-ஒளியையுடைய அகன்றகண் களோடு கூடிய பெண்ணே!
வளருதியோ? கண்வளருதியோ; தூங்குகிருயோ?
வன்செவியோ நின்செவிதான்? உன்காதும் செவிடா?
மாதேவன் வார்கழல்கள் - மகாதேவனுடைய நீண்ட வீரக் கழல்கள் அணிந்த திருவடிகளை
வாழ்த்திய வாழ்த்தொலி போய் - நாம் வாழ்த்திய வாழ்த்துப் பாடல்களின் ஓசை போய்
வீதிவாய்க் கேட்டலுமே - வீதியில் கேட்ட அளவில்,
விம்மி விம்மி மெய்ம்மறந்து - தேம்பித் தேம்பி அழுது தன்னை மறந்து
போது ஆர் அமளியின்மேல் நின்றும் புரண்டு - மலர் நிறைந்த படுக்கையினின்றும் கீழே புரண்டு
இங்ஙன் ஏதேனும் ஆகாள் கிடந்தாள்; - இப்படி ஒன் றுக்கும் பயன் படாதவளாகிக் கிடந்தாள்;
என்னே! என்னே! - என்ன ஆச்சரியம்! என்ன ஆச்சரியம்!
ஈதே எம் தோழி! பரிசு-இது எங்கள் தோழியே! உ r தன்மை.
ஏல் ஓர் - அசை.
எம்பாவாய் - நாங்கள் பூசிப்பதற்குரிய பாவையே; நோன்புத் தெய்வமாகிய பார்வதியம்மையே!

'ஏலோர் எம்பாவாய்!' என்பதை ஒவ்வொரு பாட்டின் உரையிறுதியில் சேர்த்துக்கொள்க.

'எம்பாவாய்!' என்று திருவெம்பாவை நோன்பை முன்னிலைப்படுத்தி மாணிக்கவாசக சுவாமிகள் தம் பாட்டினை அமைத்திருக்கிறார் என்றும் கருதலாம்.

'ஏல் ஓர்' என்பதை அசையாகக் கொள்ளாமல், 'ஏல்' என்பதற்கு 'ஏற்றுக்கொள்' என்றும், 'ஓர்' என்பதற்கு 'ஆராய்ந்து பார்' என்றும் பொருள் கூறுவோருமுண்டு. இப்படிப் பொருள் கூறுவது பொருத்தமுடையதன்று.

விளக்கம்

ஒளி உடையதாய் அகன்ற கண்களையுடைய மாதே! தொடக்கமும் முடிவும் இல்லாத அருட்பெருஞ் சோதியை நாங்கள் பாட நீ அதனைக் கேட்டும் கேளாதவள்போல இன்னமும் கண்வளர்கின்றாயோ? நாங்கள் அனைவரும் பாடிய பாட்டின் ஓசை உன் செவிகளில் விழவில்லையா? உன் காது செவிடா? இப்படி ஒருத்தி கேட்கிறாள்.

அதன்மேல் மற்றொருத்தி சொல்லுகிறாள் : மகாதேவனுடைய நீண்ட வீரக்கழல் அணிந்த திருவடிகளை நாங்கள் வாழ்த்துகிற வாழ்த்தொலி வீதியில் கேட்டவுடனே அதை அவளும் காதால் கேட்டிருக்கத்தான் வேண்டும். கேட்ட அளவில் அவள் விம்மி விம்மி மெய்ம்மறந்து தன் பூப் படுக்கையினின்றும் புரண்டு இப்படி ஒன்றுக்கும் பயன்படாதவளாகிக் கிடந்தாள்; இது என்னே! என்னே! எங்கள் தோழியின் தன்மை இது!

'அரும்பெருஞ்சோதி' என்றும், 'மாதேவன்' என்றும் இறைவன் இப்பாட்டில் குறிக்கப்படுகிருன். மாதேவன்' - அதாவது தேவாதி தேவனுக இருக்கும் நிலை- இறைவனது பொது இயல்பு, 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி'யாக இறைவன் இருக்கும் இயல்பு அவனது சிறப்பியல்பு

'வாள் தடங்கண் மாதே! வளருதியோ?' என்றதில், ஒளி படைத்த விசாலமான கண்களின் பயன் அந்தக் கண்களை மலரவிழித்துத் தோழிமாருடன் கலந்துகொண்டு மார்கழி நீராடப் போவதுதான் என்பதும், அத்தகைய கண்கள் படைத்த பயன் வீணுகக் கண்மூடிக் கிடப்பதல்ல என்பதும் குறிப்பு. 'கண்ணுக்கொன்றும் கெடுதி இல்லையே! ஒளி படைத்த தடங்கண்கள் அல்லவா? எனவே நாங்கள் அரும் பெருஞ் சோதியை எங்கள் பாட்டின் வாயிலாக உன் கண்ணுக்கு இலக்காக்கும்போது நீ கண்ணூரப் பருக வேண்டுமல்லவா?' என்ற பொருளையும் குறிப்பாகக் கொள்ளலாம்.

உள்ளுறை

இப் பாட்டு, ஒன்பது சக்திகளில் மனேன்மணி என்னும் சக்தியின் திருவாக்கு என்பர். மனேன்மணி சர்வ பூத தமனி என்னும் சக்தியைத் துயிலெழுப்பியதாகச் சைவ சித்தாந்த சாஸ்திர அறிஞர்கள் கூறுவதுண்டு. சர்வ பூத தமனி எழுந்துவந்து முதற் சக்தியாகிய மனேன்மணியுடனும் மற்றைத் தோழியருடனும் சேர்ந்துகொண்டு மூன்ரும் சக்தியாகிய பலப்பிரதமனியை நோக்கிச் செல்லுகிருளாம்.

எழுந்தவளோடு எல்லாரும் போய் மற்றொரு பெண்ணை எழுப்புதல்

பாசம் பரஞ்சோதிக்
கென்பாய், இராப்பகல் நாம்
பேசும்போ (து); எப்போதிப்
போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ
நேரிழையாய்? நேரிழையீர்!
சீசி! இவையும்
சிலவோ? விளையாடி
ஏசும் இடமீதோ?
விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம்
தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன்
தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்? யாம்
ஆரேலோர் எம்பாவாய். (2)

பதவுரை

பாசம் பரஞ்சோதிக்கு என்பாய், - என்னுடைய பாசம் முழுவதும் மேலான ஜோதியாகிய இறைவனுக்கே உரியது என்று நீ கூறுவாய்,

இராப்பகல் நாம் பேசும்போது - நாம் இரவும் பகலும் கூடிப் பேசும்போதெல்லாம்.

எப்போது இப்போது ஆர் அமளிக்கே நேசமும் வைத்தனையோ? - இந்தப் பூப் படுக்கைக்கு எப்போது நேசம் வைத்துக்கொண்டாயோ?

நேரிழையாய்! - சிறந்த அணிகளை அணிந்த பெண்ணே! [சொல்வாயாக, என்று கூட்டத்தில் ஒருத்தி உள்ளே இருப்பவளை நோக்கிக் கேட்க,]

நேரிழையீர்!- சிறந்த அணிகளை அணிந்த தோழியர்களே!

சீசி - சீச்சீ!

இவையும் சிலவோ? - இப்படி நகையாடி இகழ்ந்து சொல்லும் சொற்களும் உங்களிடம் சிலவே உள்ளன போலும்? ['இன்னும் பல வார்த்தைகள் இல்லையோ?' என்பது குறிப்பு.]

விளையாடி ஏசும் இடம் ஈதோ?- மேலே சொன்ன சம்பாஷணையைக் கேட்ட வேறொருத்தி, 'நீங்கள் விளையாடி ஏசிக்கொள்ளும் இடம் இதுதானோ?' என்று கேட்டுவிட்டு மேலும் சொல்லுகிறாள்.

விண்ணோர்கள் ஏத்துதற்கு - தேவர்கள் தாம் செய்யும் வணக்கத்திற்கு

கூசும் - கூச்சமடையும்

மலர்ப் பாதம் தந்தருள வந்தருளும் - மலரடிகளை நமக்குத் தந்தருள அருள்கூர்ந்து வந்திருக்கும்

தேசன் - தேஜஸ் அல்லது ஒளியை உடையவனும்
சிவலோகன் - சிவலோகநாதனும்
தில்லைச் சிற்றம்பலத்துள் ஈசனார்க்கு - தில்லைத் திருக்கூத்தனுமாகிய ஈச்வரனுக்கு
அன்பு ஆர்? யாம் ஆர்? - அன்புகொள்ளும் உரிமையுடையார் யாவர்? நாம் எத்தகைய நிலையில் இருக்கிறோம்?
'ஈசன் ஆர்க்கு' என்று பிரித்துப் பொருள் கூறுவோரும் உண்டு:
'ஆர்' - கொன்றை மாலை.
'அன்பு ஆர்?' என்பதற்கு 'அன்பு உரிமைக்கு ஆர் தகுதியுடையவர்?' என்று பொருள் கூறுவதும் உண்டு.
'நாம் ஆர்?' என்பதற்கு 'விளையாடி ஏசி நிற்கும் நாமோ தகுதியுடையவர் ஆவோம்?' என்பர்.

விளக்கம்

சிறந்த அணிகளைப் பூண்ட அழகியே! அல்லும் பகலும் நாம் கூடிக்கூடிப் பேசும் போதெல்லாம் நீ என்ன கூறுவாய் என்பதை இப்போது உனக்கு நினைவூட்டுகிறோம். 'என்னுடைய பாசமெல்லாம் பரஞ்சோதிக்கே உரியது' என்று கூறுவாயல்லவா? அப்படிக் கூறும் நீ இந்தப் பூப் படுக்கைக்கே நேசம் வைத்தது எப்போது? இப்படி ஒருத்தி கேட்கிறாள்.

இதற்கு உள்ளே இருப்பவளும் பரிகாசமாக விடை கூறுகிறாள்: சிறந்த அணிகளை அணிந்திருக்கும் பெண்களே! சீச்சீ! இப்படிப் பரிகாசமாகப் பேசுவதற்குச் சில சொற்களைக் கற்றிருக்கிறீர்களோ? இன்னும் இத்தகைய பல சொற்கள் உங்களிடம் இல்லையோ

இந்தச் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த வேறொருத்தி (வெளியே கூட்டத்தில் நின்றுகொண் டிருப்பவள்), வீணாய்ப் பரிகாசப் பேச்சில் காலம் கழி கிறதே என்று கருதி, 'நீங்கள் ஒருவரை யொருவர் விளையாட்டுப் புத்தியுடன் ஏசிக்கொள்வதற்கு இது தான் இடமோ? இதுதான் வாய்த்த சந்தர்ப்பமோ?' என்று, மேலும் பேசுகிறாள்.

ஈச்வரனுடைய திருவடிகளை வானவர்களும் வணங்குவதற்குக் கூசுகிறார்கள்; ஏனென்றால் அவர் கள் மெய்யன்பு இல்லாதவர்கள். அத்தகைய அடி மலர்களை நமக்குக் கருணை கூர்ந்து தருவதற்கு வந் தருளுகிறான் தேஜோமயனும் சிவலோக நாதனும் தில்லைத் திருக்கூத்தனுமாகிய ஈச்வரன். அத்தகைய உரிமையுடையவர் யார்? நாம் எந்த நிலையிலிருக் கிறோம்? இப்படி இவள் இடையே புகுந்து இடித்துக் கூறுகிறாள்.

'நேரிழையாய்!' 'நேரிழையீர்!'- 'அலங்காரச் செல்வியே!' 'செல்வியரே!'- என்பதில், அணி கள் அழகு வாய்ந்தனவே அன்றி அழகு குணத்தில் இல்லையே என்பது பரிகாசக் குறிப்பு.

'தேசன்' அருளாகிய தேஜஸ் உடையவன்.

உள்ளுறை

சர்வபூததமனிபரிகசிக்க, பலப்பிரதமனி தானும் பரிகசித்துவிட்டு எழுந்துதிருக் கூட்டத்துடன் கலந்து கொள்கிறாள். மனோன்மணி சர்வபூததமனி பலப்பிரத மனி என்ற மூவரும் தோழியருடன் நான்காவது சக்தியைத் துயிலுணர்த்தப் போகிறார்கள்.

வழக்கமாக எதிர் எழுந்து வருபவள் தூங்கும்போது எழுப்புவது

முத்தன்ன வெண்ணகையாய்!
முன்வந் தெதிர்எழுந்தென்

அத்தன்ஆ னந்தன்
அமுதன்என் றள்ளூறித்

தித்திக்கப் பேசுவாய்,
வந்துன் கடைதிறவாய்!

பத்துடையீர்! ஈசன்
பழவடியீர்! பாங்குடையீர்!

புத்தடியோம் புன்மைதீர்த்(து)
ஆட்கொண்டாற் பொல்லாதோ?

எத்தோ நின் அன்புடைமை?
எல்லோம் அறியோமோ?

சித்தம் அழகியார்
பாடாரோ நம்சிவனை?

இத்தனையும் வேண்டும்
எமக்கேலோர் எம்பாவாய். (3)

பதவுரை

முத்து அன்ன வெண் நகையாய் - முத்துப் போன்ற வெண் பற்களின் ஒளி தோன்ற நகைப்பவளே!

முன் வந்து எதிர் எழுந்து-இதற்கு முன்பு எங்களுக்கு எதிரே எழுந்து வந்து,

என் அத்தன், ஆனந்தன், அமுதன் என்று - 'என் அப்பனே! ஆனந்தமாக இருப்பவனே!' எனக்கு அமுதமாக இருப்பவனே! என்றெல்லாம்,

அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய் - வாயூறி இனிக்கப் பேசுவாயே,

வந்து உன் கடை சிறவாய் - நீ இப்போது எழுந்து வந்து உன் படுக்கையறை வாசற் கதவைத் திற. [இப்படிக் கூட்டத்தில் ஒருத்தி சொல்லுகிருள். அதற்கு உள்ளேயிருப்பவள் விடைகூறுகிருள்]:

பத்துடையீர்! - கடவுள்மேல் பற்றுடைய மெய்யன்பர் களே!

ஈசன் பழ அடியீர்! ஈசனுக்குப் பழைய காலந்தொட்டு அடியார்களாக இருப்பவர்களே!

பாங்கு உடையீர்! - இறைவனேடும் அடியவரோடும் பயின்று வரும் மிக்க உரிமை உடையவர்களே!

புத்தடியோம் புன்மை தீர்த்து - புதிய அடிமைகளாகிய எங்கள் சிறுமையைத் தீர்த்து

ஆட்கொண்டால் பொல்லாதோ? - நீங்கள் எங்களை அடிமை கொண்டால் அது பொல்லாத செயலா குமோ? [இப்படி இடித்துரைத்தாள் உள்ளே இருப்பவள் விடை கூறும்போது, இது கேட்டு முன் பேசியவள் சொல்லுகிருள்.]

எத்தோ நின் அன்பு உடைமை - நீ இறைவனிடத்துக் கொண்டிருக்கும் அன்பு எத்து அல்லது வஞ்சனை ஆகுமோ?

எல்லாம் அறியாமோ? -உன்னைப்பற்றிய விஷயங்களை யெல்லாம் உன்னோடு பழகிவரும் நாங்கள் அறிந்திருக்க வில்லையா?

சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை?- அழகு வாய்ந்த சித்தம் உடையவர்கள் நமது சிவனைப் பாடாமல் இருப்பார்களா?

இத்தனையும் வேண்டும் எமக்கு- உன்னைத் துயிலெழுப்ப வந்த எங்களுக்கு நீ சொன்ன இத்தனை வார்த்தைகளும் வேண்டும் அம்மா! [இப்படி ஒருவாறு மனம் வருந்திப் பேசினாள் வெளியே நின்று பேசிய தோழி.]

விளக்கம்

உள்ளே படுத்திருக்கிறாள் ஒருத்தி. 'முத்தன்ன வெண்ணகையாய்!' என்று அவள் அழகிய பல்வரிசை தோன்ற நகைத்துப் பேசும் அந்த உவகை அழகைக் குறிப்பிட்டு அவளை விளித்துப் பேசுகிறாள் கூட்டத்தில் வெளியே நிற்கும் தோழி.

'நீ வழக்கமாக எங்களுக்கு முன் விழித்தெழுந்து வருவாயே; வந்து 'என் அத்தன்! ஆனந்தன்! அமுதன்!' என்றெல்லாம் வாயூறித் தித்திக்கப் பேசுவாயே! இப்போது எழுந்து வந்து கதவைத்திறவாய்' [இப்படி அவள் சொல்ல, உள்ளே படுத்திருப்பவள் தன்னைத் தோழி ஏளனம் செய்வதாக நினைத்துக்கொள்கிறாள்.]

எனவே, அந்தத் தோழியையும் கூட்டத்தையும் நோக்கி, 'நீங்கள் இறைவன் மேல் பற்றுடைய மெய்

யன்பர்கள்; பழமையான அடியார்கள்; அடியவரோடும் ஆண்டவனேடும் பாங்காகப் பழகி வருகிறீர்கள்! என்னைப் போன்றவர்களோ புதிய அடிமைகள்; எங்கள் சிறுமை போக்கி ஆட்கொண்டால் அது பொல்லாத காரியமாகுமோ?' என்று இடித்துரைக்கிருள்.

இது கேட்டதும் முன் பேசிய தோழி, 'நீ இப்போது சொல்வது உண்மையானல் இறைவனிடத்து நீ கொண்டுள்ள அன்பு மெய்யன்பு இல்லையா? வஞ்சம் தானே? உன்னைப்பற்றி எல்லாம் நாங்கள் அறிந்திருக்கவில்லை யென்ரு நினைக்கிருய்?' என்று எதிர்க் கேள்விகள் போடுகிருள்.

மேலும் பேசுகிருள் இந்தத் தோழி: 'முத்தன்ன வெண்ணகையாய்!' என்று உன் புற அழகைக் குறிப்பிட்ட நான், உனக்குச் சித்த அழகும் உண்டு என்பதை அறியாதவளா? சித்தம் அழகியார் நம் சிவனைப் பாடாமல் இருப்பார்களோ என்ற அதிசயம்தான் எனக்கு இப்போது. அது இருக்கட்டும்; உன்னை எழுப்ப வந்ததற்கு நீ சுடச்சுடப் பேசிய வார்த்தையும் வேண்டியதுதான்!'

'பற்று' என்பது 'பத்து' என ஆயிற்று. 'பத்தி' என்பதே 'பத்து' என்று கூறுவதுமுண்டு. 'அத்தன்' என்றதில் அப்பனுடைய அருட் செல்வம் மக்களுக்கு உரியது என்பது குறிப்பு. அமுதன் - 'அழியாதவன்' என்றும் பொருள்படும்.

உள்ளுறை

பலப்பிரதமனி என்னும் சக்தியும் பிறரும் பலவிகரணி என்னும் சக்தியை எழுப்புகிருர்கள்.

உறக்கத்தில் அதிக விருப்பமுள்ளவளை எழுப்புதல்

ஒண்ணித் திலநகையாய்!
இன்னம் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியார்
எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா
சொல்லுகோம்; அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே
காலத்தைப் போக்காதே!
விண்ணுக் கொருமருந்தை
வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப்
பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக
யாம்மாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில்
துயிலேலோர் எம்பாவாய். (4)

பதவுரை

ஒள் நித்தில நகையாய் - ஒளி பொருந்திய முத்தைப் போன்ற பற்களை உடையவளே!

இன்னம் புலர்ந்தின்றோ - உனக்கு இன்னும் பொழுது விடிந்ததில்லையோ? [இப்படிக் கூட்டத்தில் ஒருத்தி கேட்கிறாள்; அதற்கு உள்ளே இருப்பவள் விடையாக வேறொரு கேள்வி கேட்கிறாள்.]

வண்ணக் கிளிமொழியார் - அழகிய கிளியின் பேச்சை ஒத்த பேச்சையுடைய நம் கூட்டத்துப் பெண்கள் அனைவரும் வந்துவிட்டார்களா? [இப்படிக் கேள்விக்குக் கேள்வி விடையாக வரவே, அதன் மேல் கூட்டத்தில் இருந்த வேறொருத்தி சொல்லுகிறாள்.]

எண்ணிக் கோடு உள்ளவா சொல்லுகோம் - எண்ணிப் பார்த்து வந்தவர்களை இத்தனை பேர் என்று கணக்கிட்டு உனக்கு உள்ளவாறு சொல்லுவோம்.

அவ்வளவும் கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே - அது வரையில் நீ தூங்கி வீண் பொழுது போக்காதே.

விண்ணுக்கு ஒரு மருந்தை - தேவர்களுக்கு ஒப்பற்ற மருந்து போன்றவனை,

வேத விழுப் பொருளை - வேதத்துக்குச் சிறந்த பொருளாக இருப்பவனை,

கண்ணுக்கு இனியானை - காட்சிக்கு இனிய கருணை வடிவம் காட்டும் இறைவனை,

பாடிக் கசிந்து உள்ளம் - பாடி மனம் கசிந்து,

உள் நெக்கு நின்று உருக - உள்ளுக்குள்ளே
நெகிழ்ந்து நின்று உருகுதலால்,
யாம் மாட்டோம் - நாங்கள் அதைச் செய்வதற்கு
இயலாதவர்களாய் இருக்கிறோம்.
நீயே வந்து எண்ணிக் குறையில் துயில் - ஆகையால்
நீயே எழுந்து வந்து எண்ணிப் பார்த்துத்
தொகை குறைந்தால் மறுபடியும் போய்த் தூங்கு.

விளக்கம்

பொழுது புலர்ந்ததை அறிந்துகொள்ளாமலும், திருக்கூட்டத்தைச் சேர்ந்த பெண்கள் எல்லாரும் வந்துவிட்டார்கள் என்பதை அறிந்துகொள்ளாமலும் ஒருத்தி உள்ளே உறங்கிக் கொண்டிருந்தாள்.

அப்போது கூட்டத்திலிருந்த ஒருத்தி உள்ளே இருப்பவளை 'ஒண்ணித்தில நகையாய்!' என்று கூப்பிடுகிறாள். கூப்பிட்டு, 'அம்மா, உனக்கு இன்னும் பொழுது விடிந்ததில்லையோ?' என்று கொஞ்சம் குறும்பாகவே கேட்கிறாள்.

அதற்கு அவள் 'வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்துவிட்டார்களா?' என்று ஒரு கேள்வி போடுகிறாள். அதன் மேல் கூட்டத்திலிருந்த வேறொருத்தி, 'வந்தவர்களை எண்ணிப் பார்த்துக் கணக்கிட்டு உனக்கு உள்ளபடியே தெரிவிக்கிறோம்' என்று முதன் முதல் சொல்லுகிறாள்.

உடனே, 'நீ அதற்குள் கொஞ்சம் கண் துயின்று வீணைக் காலம் போக்கலாம் என்று நினைக்கிறாயோ?, அப்படிச் செய்யாதே; நீயே வந்து எண்ணிப் பார்த்துக்கொள் அம்மா!' என்றும் சொல்கிறாள்.

'நாங்கள் எண்ணிக் கணக்கிட்டுச் சொல்லும் நிலையில் இல்லை' என்பதையும் உணர்த்துகிருள். 'இறைவனைப் பாடிக் காதலாகிக் கசிந்து உருகி நிற்ப வர்கள் எண்ணிக் கணக்கைச் சரியாகப் பார்த்துச் சொல்லிவிட முடியாதே!' என்கிருள்.

ஆகவே, 'நீயே உறக்கத்தைச் சற்று உதறித் தள்ளிவிட்டு வந்து எண்ணிப் பார்த்துக்கொள்' என்கிருள். 'தொகை குறைந்தால் போய்த் தூங்கு!' என்று நகைச் சுவை ததும்பப் பேசி முடிக்கிருள். தோழிமார் நகைச்சுவைத் ததும்பப் பேசிக்கொள் வது இப் பாடல்களின் ஒரு சிறப்பியல்பு. 'எண்ணிப் பார்த்துச் சொல்லுகிருேம்' என்று முதன் முதல் சொன்னவள், 'நீயே வந்து எண்ணிக்கொள் அம்மா! எங்களுக்குப் பக்தி பண்ணவே நேரம் போதுமான தாக இல்லை; வேறு வீணை காரியங்களுக்கு அவகாசம் ஏது? மன நிலையும் இடம் கொடுக்கவில்லை' என்று தொடர்ந்து குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. 'அறிவால் சிவன்!' என்று போற்றப்பெறும் மணிவாசகப் பெருமான் வாழ்க்கையை எவ்வளவு நன்ருக உற்று நோக்கியவர் என்பது இனிது புலனுகும். பக்திச் சுவைக்கும் நகைச் சுவைக்கும் முரண்பாடு இல்லை என்பதும் தெளிவு.

உள்ளுறை

பலவிகரணி என்னும் சக்தி கலவிகரணி என்னும் சக்தியை எழுப்புவதாக அமைந்திருக்கிறது என்பர். கலவிகரணியும் சேர்ந்து கொள்ள எல்லாரும் ஆரும் சக்தியாகிய காளியை நோக்கிப் போகிருர்கள்.

சொல்லும் பொருளும் ஒத்திருக்க வில்லையே என்று ஒரு தேன்மொழியாளை இடித்துரைத்து எழுப்புதல்

மாலறியா, நான்முகனும்
காணா, மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள
பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப்
படிறீ! கடைதிறவாய்;
ஞாலமே விண்ணே
பிறவே அறிவரியான்
கோலமும், நம்மைஆட்
கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச்
சிவனே! சிவனே! என் (று)
ஓலம் இடினும்
உணராய், உணராய்காண்!
ஏலக் குழலி
பரிசேலோர் எம்பாவாய். (5)

பதவுரை

மால் அறியா - திருமாலால் அறியப்படாதவனும்
நான்முகனும் காணு - நான்கு முகங்களையுடைய பிரம தேவனால் காண்டற்கு அரியனுமாகிய
மலையினை - (இங்கே) இறைவனை
நாம் போல் அறிவோம் என்று - 'நாங்கள்தாம் அறிந்துகொள்வோம் போலும்!' என்று
உள்ள பொக்கங்களே பேசும் - உள்ள பொய் வார்த்தைகளைப் பேசும்
பால் ஊறு தேன் வாய் - பாலோடு ஊறுகின்ற தேன் போன்ற வாய்ப் பேச்சையுடைய
படிறீ - படிறு அல்லது வாஞ்சகத்தை உடையவளே!
கடை திறவாய் - வாசற் கதவைத் திறவாய்.

[இப்படிக் கூட்டத்தில் நின்ற ஒருத்தி கூற, அதே கூட்டத்திலிருந்த வேறொருத்தி சொல்லுகிறாள்.]

ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான் கோலமும் - இந்தப் பூமியிலுள்ளவர்களும் விண்ணுலகத்தாரும் வேறு உலகங்களில் உள்ளவர்களும் முயன்று அறிந்துகொள்வதற்கு அரியவனை இறையவனது திருக்கோலமும்
நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும் சீலமும் பாடி - வலிய வந்து நம்மை ஆண்டுகொண்டு அருளி நம்மிடமுள்ள குறைபாடுகளைப் போக்கும் சீலமும் ஆகிய இவற்றைப் பாடி.
சிவனே! சிவனே! என்று ஓலம் இடினும் - 'சிவனே! சிவனே!' என்று உரத்து ஓலமிட்டுக் கதறினாலும்
உணராய்! உணராய்காண்! - அந்தக் குறிப்பை

உணர்ந்துகொண்டாய் இல்லை
ஏலக் குழலி பரிசு - மயிர்ச் சாந்து பூசி மணக்கின்ற
கூந்தலை உடையவள் தன்மை இது!

விளக்கம்

'திருமாலும் நான்முகனும் காண்பதற்கு அரிய இறைவனை நாங்கள்தாம் அறிந்து கொள்வோம் போலும், அந்த மலையை எளியவர்களாகிய நாங்கள் அறிவதுதான் எப்படி?' என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தவள் உள்ளே இப்போது உறங்கிக் கொண்டிருக்கிருள்.

அத்தகைய மனநிலை உள்ளவள் இதற்குள்ளே திருக்கூட்டத்தில் வந்து கலந்துகொண்டிருக்க வேண்டாமா? எனவே அந்த வார்த்தைகள் எல்லாம் பொய்யுரைகள் என்கிருள் வெளியே கூட்டத்தில் நிற்கும் ஒருத்தி.

பாலும் தேனும் கலந்ததுபோல் இருந்ததாம் அந்தப் பேச்சு. அது பொய்யாகவே, அந்தப் பாலூறு தேன்வாய்ப் பெண்ணை 'வஞ்சகியே!' என்று கூப்பிடுகிருள் தோழி.

அது கேட்ட இன்னொருத்தி (அந்தத் திருக் கூட்டத்திலிருப்பவள்), அவளைத்தடுத்துப் பேசுகிருள். மண்ணும் விண்ணும் ஏனைய உலகங்களும் அறிந்து கொள்வதற்கு அரிய தன்மை வாய்ந்த இறைவனது கோலத்தையும், அவன் வலிய வந்து நம்மை ஆட் கொண்டு குறைபாடுகளைப் போக்குகிற அந்தச் சீலத் தையும் பாடிச் 'சிவனே! சிவனே!' என்று உரத்து ஓலமிடுகிருள்.

வஞ்சகி!' என்று அவள் கூப்பிட்டது உள்ளே இருப்பவள் காதில் விழலாகாது என்றே உரத்துச் சிவ நாமங்களைக் கூறி ஓலமிடுகிறாள்.

அப்படி இவள் ஓலமிட்டும் அவள் உணர்ந்து கொள்ளவில்லையாம். அந்த அறியாமையைக் கோபித்து 'ஓலம் இடினும் உணராய், உணராய் காண்!'' என்கிறாள். தன் குறிப்பை அந்தத் தோழி உணர்ந்துகொள்ளவில்லையே என்று வருந்துகிறாள்.

உள்ளே இருப்பவளை 'ஏலக் குழலி' என்று குறிப்பிட்டு அவளுடைய தன்மையை நீ உணர்ந்து கொண்டாயில்லை என்று முடிவாகக் கூறுகிறாள்.

மாலும், அறியா, நான்முகனும் காணா, மலை என்பதில், திருமாலும் பிரமனும் அடி முடி தேடிக் காணாத இறைவனது நிலையைக் குறிப்படும் திருவண்ணாமலைத் தல புராணக் கதை குறிக்கப்படுகிறது எனலாம்.

இந்தப் பாட்டுக்கு வேறுவிதமாய்ப் பொருள் கூறுவோரும் உண்டு.

உள்ளுறை

கலவிகரணி என்னும் சக்தியும் பிறரும் காளி என்னும் சக்தியை எழுப்புவது இப்பாட்டின் உள்ளுறை பொருள் என்பர். காளியும் பிறருடன் சேர்ந்து ஏழாம் சக்தியை எழுப்பப் போகிறாள்.

சொன்னபடி நடக்கவில்லையே
என்று சொல்லி மான்விழியாள் ஒருத்தியை எழுப்புவது

மானே! நீ நென்னலை
நாளைவந் துங்களை

நானே எழுப்புவன்
என்றலும், நாணுமே

போன திசைபகராய்;
இன்னம் புலர்ந்தின்றோ?

வானே நிலனே
பிறவே அறிவரியான்

தானேவந் தெம்மைத்
தலையளித்தாட் கொண்டருளும்

வான்வார் கழல்பாடி
வந்தோர்க்குன் வாய்திறவாய்!

ஊனே உருகாய்;
உனக்கே உறும்; எமக்கும்

ஏனோர்க்கும் தங்கோனைப்
பாடேலோர் எம்பாவாய். (6)

பதவுரை

மானே-மான்போன்ற விழியுள்ள பெண்ணே!

நீ நென்னலை நாளைவந் துங்களை நானே எழுப்புவன் என்றலும் - நேற்று நீ 'உங்களை நாளைக்கு நானே வந்து துயிலுணர்த்துவேன்' என்று எங்களுக்குக் கூறியவுடன்,

[ஒருத்தி போய்விட்டாள்.]

நாணுமே போன திசை பகராய் - நீ நாணமல் அவள் போன திசையைக் கூறுவாய்;

இன்னம் புலர்ந்தின்றோ - அந்த அம்மாள் வந்து எங்களை எழுப்புதற்கு இன்னும் பொழுது விடியவில்லையோ?

வானே நிலனே பிறவே அறிவரியான் தானே வந்து - வானும் நிலமும் பிற உலகங்களும் அறிய முடியாத பெருமான் நமக்காகத் தானே வலிய வந்து.

எம்மைத் தலை அளித்து ஆட்கொண்டருளும் - சிறந்த முறையில் கருணை புரிந்து எங்களை ஆட்கொண்டு அந்த அருளுக்கு -அறிகுறியாகக் கொடுத்தருளும்

வான் வார் கழல் பாடி - பெருமை பொருந்திய திருவடியைப் பாடி

வந்தோர்க்கு உன் வாய்திறவாய் - வந்தவர்களாகிய எங்களுக்கு உன் வாயைத் திறந்தாயுமில்லை;

ஊனே உருகாய் - உடல் உருகுகின்றாய் இல்லை.

உனக்கே உறும் - இப்படி இருப்பது உனக்குத்தான் பொருந்தும்!

எமக்கும் ஏனோர்க்கும் தம்கோனைப் பாடு-எங்களுக்கும் பிறருக்கும் தலைவனை இறைவனைப் பாடு.

விளக்கம்

உள்ளேயிருந்து உறக்க மயக்கத்துடனே வந்து சேர்ந்தவளை 'மானே!' என்று கூட்டத்திலுள்ள ஒருத்தி விளித்துப் பேசுகிருள்.

'நீ நேற்று எங்களுடன் பேசிக்கொண்டிருந்தாயே; அப்போது என்ன சொன்ஞய் என்பது நினைவில் இருக்கிறதா? என்கிருள்.'

'நாளைக்கு நானே முந்தி எழுந்து வந்துஉங்களை எழுப்புவேன் என்று சொல்லிப் போஞளே ஒருத்தி, அவள் போன திசையைச் சொல்லம்மா! நாணுமல் கோணுமல் சொல்லம்மா!' என்று பரிகசிக்கிருள்.

இப்போதும் அவள் வந்து எழுப்புவதற்குப் பொழுது புலர்ந்ததில்லையோ என்றும் பரிகசிக்கிருள்.

பிறகு 'அது இருக்கட்டும்' என்று சொல்லி இறைவனது பெருமையையும் அருட் சிறப்பையும் ஞாபகப்படுத்துகிருள். 'வானும் நிலனும் பிறவும் அறிதற்கரிய பெருமான் தானே வலிய வந்து எமக்குக் கருணைகாட்டி ஆட்கொள்ளுமாறு தனது திருவடிகளைக் கொடுத்து அருளுகிருனே, அந்த வானளாவிய நீண்ட வீரக் கழலை அணிந்த திருவடிகளை நாங்கள் புகழ்ந்து பாடிக்கொண்டல்லவா வந்திருக்கிருேம்?' என்கிருள். எனவே 'எம்பொருட்டேனும் நீ கதவை உடனே திறக்காவிட்டாலும் உன் வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொல்லி யிருக்கலாமே; அப்படியும் செய்யவில்லையே!' என்கிருள்.

'வாய் திறக்கவுமில்லை; உனக்கு உடல் உருகவுமில்லையே; அப்படியிருப்பது உனக்குத்தான் அம்மா பொருந்தும்!' என்கிருள். கடைசியாக, உனக்கு

அவன் தலைவன் இல்லையா? இல்லாவிட்டாலும் எங்களுக்கும் ஏனையோருக்கும் தலைவனல்லவா? இந்தத் தலைவனைப் பாடுவாய் அம்மா!' என்று கூறி முடித்து, அவளது உறக்க மயக்கம் தெளிவிக்கிருள் தோழி.

மான் விழியுள்ள இப் பெண்ணை நோக்கித் தோழி, 'நீ போன திசை பகராய்' என்று சொல்லாமல், 'அவள் போன திசையை நீ சொல்வாய்!' என்று படர்க்கையிலும் முன்னிலையிலும் குறிப்பிட்டுப் பேசுவது கவனிக்கத் தக்கது. 'நீ சொன்ன அந்த வார்த்தை எந்தத் திசையாகப் பறந்து போயிற்று!' என்பது குறிப்பு.

இப்படிப் போகும் வழியிலே பேச்சு நடக்கிறது எனக் கருதுவது பொருந்தும். கோபம் மூட்டுவதுபோல் நட்புக் காதலைத் தெரிவிக்கும் முறையை இங்கே காணலாம்.

உள்ளுறை

காளியும் வேறு சக்திகளும் ரௌத்திரி என்ற சக்தியை எழுப்புவது இப் பாட்டின் உள்ளுறை பொருள் என்பர். இனி ரௌத்திரியையும் சேர்த்துக் கொண்டு எல்லாரும் எட்டாவது சக்தியை எழுப்பப் போகிருர்கள்.

'நீயுமா இப்படிப் பேதைபோல் கிடப்பது?'

அன்னே! இவையுஞ்
சிலவோ? பல அமரர்
உன்னற் கரியான்
ஒருவன், இருஞ்சீரான்,
சின்னங்கள் கேட்பச்
'சிவன்!' என்றே வாய்திறப்பாய்;
'என்ன'என் னாமுன்னம்
தீசேர் மெழுகொப்பாய்;
'தென்னானை' 'என் அரையன்'
'இன்னமுதெ'ன் றெல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய்;
இன்னம் துயிலுதியோ?
வன்னெஞ்சப் பேதையர்போல்
வாளா கிடத்தியால்!
என்னே துயிலின்
பரிசேலோர் எம்பாவாய். (7)

பதவுரை

அன்னே - அம்மா! அன்னையே!

இவையுஞ் சிலவோ - உன்னுடைய செயல்களில் சில இப்படியும் இருக்கலாமா?

பல அமரர் உன்னற்கு அரியான் - பலவகைப்பட்ட தேவர்களாலும் நினைப்பதற்கு அரியவனும்

ஒருவன் - ஒப்பற்றவனும்

இருஞ் சீரான் - மிகுந்த சிறப்புடையவனும் ஆகிய சிவபெருமானுக்கு உரிய

சின்னங்கள் கேட்ப - வெற்றிச் சின்னங்கள் ஆகிய ஊதுகொம்பு முதலியன இசைக்க அதைக் கேட்ட அளவிலே; சிவன் கோயிலில் ஊதும் திருச்சின்னங்களின் ஒலி கேட்டலுமே

சிவன் என்றே வாய் திறப்பாய் - 'சிவ! சிவ!' என்று வாயாரச் சொல்வாயே;

தென்னா என்னா முன்னம் - 'தென்னா' என்று சொல்லத் தொடங்கி முடிக்கு முன்பே.

தீ சேர் மெழுகு ஒப்பாய் - தீயில் சேர்ந்த மெழுகு போல நீ உருகுவாயே.

என்னானை என் அரையன் இன்னமுது என்று - எனக்கு யானை போன்றவன் என்றும், என்னை ஆளுகின்ற அரசன் என்றும் எனக்கு இனிய அமுதமானவன் என்றும்;

எல்லோமும் சொன்னோம் கேள் வெவ்வேறாய் - நாங்கள் அனைவரும் தனித்தனியே சொன்னோமே.

இன்னம் துயிலுதியோ - இன்னமும் தூங்குகிறாயா?

வன்னெஞ்சப் பேதையர்போல் - கடுமையான நெஞ்சையுடைய அறிவில்லாதவர்கள் போல

வாளா கிடத்தியால் - சும்மா உறங்கிக் கிடக்கிருயே;
என்னே துயிலின் பரிசு - நீ நல்லவள் தான்; ஆனல்
உறக்கத்தின் கொடிய தன்மைதான் என்னே!

விளக்கம்

'அம்மா நீ நல்லவள்; உன்னுடைய செயல் களில் சில இப்படியும் இருக்கலாமா?' என்று உள்ளே இருப்பவளை நோக்கி வெளியே நிற்கும் தோழி ஒருத்தி சொல்லத் தொடங்குகிருள். பிறகு அவளது பக்தி குறித்துப் பேசுகிருள்.

'பலவகைப்பட்ட தேவர்களால் 'நினைத்தற்கும் அரியவன், ஒரு முதல்வன் பெருஞ் சிறப்புடையவன்' என்று சிவபெருமானை வருணித்துவிட்டு, அவனது வெற்றிச் சின்னங்கள் போல் கோவிலில் ஊதும் ஊதுகொம்பு முதலான திருச்சின்னங்களைக் குறிப் பிடுகிருள். அந்தச் சின்னங்களின் ஓசை கேட்ட லுமே 'சிவ! சிவ!' என்று அவள் வாய் சொல்லத் தொடங்கி விடுமாம்.

'தென்ன' என்று சொல்லத் தொடங்கி முடிப்ப தற்கு முன்பே நீ தீயிலிட்ட மெழுகு போல் உருகிப் போவாயே என்கிருள். 'தென்னடுடைய சிவனே!, என்று முழுவதும் சொல்வதற்கு முன்பே உருகிப் போகும் அவளது பக்தி நிலையை நினைப்பூட்டுகிருள் தோழி.

அப்படி இருந்தவள் இப்போது எப்படி இருக்கி ருள்? 'என்னனை, என் அரசன் என்னுடைய இன் னமுது' என்று வெவ்வேருய் எல்லாரும் இறைவனை வாழ்த்தியும், இன்னமும் தூங்குகிருயே என்கிருள்.

எவ்வளவு மென்மையானது உன் நெஞ்சம்! வன்நெஞ்சமுள்ள அறிவிலிகள் போல் இப்படிச் சும்மா கிடக்கிருயே! உன்மீது என்ன குற்றம்? எல்லாம் அந்தப் பொல்லாத தூக்கத்தின் குற்றம் தான்; என்னே நித்திரா தேவியின் கொடுமை! இப்படிச் சொல்லி முடிக்கிருள் தோழி.

போகும் வழியிலே 'நிற்கும் போதும் நடக்கும் போதும் உறங்குகிருயே!' என்று ஒருத்தி வேருெத்தியைப் பரிகசிப்பதாகவும் இச்செய்யுளுக்குப்பொருள் கூறுவதுண்டு.

'என்னுனே என் அரையன் இன்னமுது' என்று! ஒவ்வொருவரும் தனித்தனியே கூறியதை நினேவூட்டித் தோழிக்கு உணர்வூட்டப் பார்க்கிருள்.

'என் ஆனே என்பதில், யானேயானது காலேக்காட்டிப் பாகனேத் தலேமேல் தூக்கி வைத்துக்கொள்வது போல் இறைவன் திருவடிகளேத் தந்தருளி அடியவருக்குத் தலேமைப் பதவி தந்தருளுவான்' என்பது குறிப்பு.

'தென்ன!' - 'தென் பாண்டி நாட்டானே!' என்றும், 'அழகனே!' என்றும் பொருள்படும்.

உள்ளுறை

ரௌத்திரியும் வேறு சக்திகளும் சேட்டை என்னும் சக்தியைத் துயிலெழுப்புவது இதன் உள்ளுறை பொருள் என்பர். சேட்டையும் மற்றவர்களோடு சேர்ந்துகொண்டு ஒன்பதாம் சக்தியை நோக்கிப் போகிருள்.

ஏழை பங்காளனையே
பாடு

கோழி சிலம்பச்
சிலம்பும் குருகெங்கும்;

எழில் இயம்ப
இயம்பும்வெண் சங்கெங்கும்;

கேழில் பரஞ்சோதி
கேழில் பரங்கருணை

கேழில் விழுப்பொருள்கள்
பாடினோம், கேட்டிலையோ?

வாழி ஈதென்ன
உறக்கமோ? வாய்திறவாய்!

ஆழியான் அன்புடைமை
ஆமாறும் இவ்வாறோ?

ஊழி முதல்வனாய்
நின்ற ஒருவனை

ஏழைபங் காளனையே
பாடேலோர் எம்பாவாய். (8)

பதவுரை

கோழி சிலம்ப கோழி கூவவும் அது கேட்டு எங்கும்

சிலம்பும் குருகு எங்கும் - ஓசை எழுப்புவதுபோல் ஏனைய பறவைகளும் கத்துகின்றன.

எழில் இயம்ப - இசைவாணர் ஏழிசை ஒலிக்க

இயம்பும் வெண் சங்கு எங்கும் - அதன் பின்னே ஊதுவோர் சங்கொலிகளை எங்கும் எழுப்புகிறார்கள்.

கேழில் பரஞ்சோதி - இந்த நேரத்தில் ஒப்பற்ற பரஞ்சோதியைப் பற்றி,

கேழில் பரங்கருணை - அந்தப் பரஞ்சோதியின் ஒப்பற்ற பேரருளைப் பற்றி,

கேழில் விழுப்பொருள்கள் - அவனது ஒப்பற்ற சிறந்த செய்திகளைப் பற்றி.

பாடினோம் கேட்டிலையோ - நாங்கள் அனைவரும் பாட்டுக்கள் பாடினோம், நீ கேட்கவில்லையா?

வாழி- அசை நிலை - உறங்குவது கேடு தருமே என்று அவளை வாழ்த்தியதாகவும் கொள்ளலாம்.

ஈது என்ன உறக்கமோ - இது என்ன உறக்கமோ தெரியவில்லையே?

வாய்திறவாய்- வாய்திறந்து பேசுவாய்.

ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ- அன்புக் கடலான தலைவனிடம் அன்புடையவள் என்று பேர் பெற்றிருந்தாயே, இதுவா அதற்கு அடையாளம்?

ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை - ஊழிக் காலங்களுக்கு முதல்வனாக நிலைபெற்ற ஒப்பற்றவனை

ஏழை பங்காளனையே பாடு - அருட் சக்தியாகிய உமையம்மையை என்றும் பக்கத்தில் கொண் டிருப்பவனை இனியேனும் பாடுவாய்.

ஏழில்- ஏழ்+இல் - ஏழ் இடம்; ஆகுபெயராய் ஏழிசையை உணர்த்துகிறது.

ஆழியான்- 'கூடல் இழைத்தலால்' என்றும் பொருள் படும். தலைவனைப் பிரிந்த தலைவி அவன் வரும் குறிப்பை நிலத்தில் சுழித்துப் பார்க்கும் ஒரு வகைக் குறியால் அறிந்து கொள்வது - 'கூடல் இழைத்தல்' ஆகும்.

விளக்கம்

கூட்டத்தில் ஒருத்தி, 'கோழி கூவவும் ஏனைய பறவைகளும் ஓசை எழுப்புகின்றனவே' என்று சொல்லிப் பொழுது விடிந்ததைக் குறிப்பிடுகிருள். ஏழிசையை இசைவாணர் இயம்ப, அதைத் தொடர்ந்து சங்கொலிகள் கேட்பதையும் குறிப்பிடுகிருள்.

'இப்படி நன்ருகப்பொழுது புலர்ந்தது; நாங்களும் பரஞ்சோதியின் ஒப்பற்ற மேனி ஒளியையும், ஒப்பற்ற பேரருளையும், அவனது ஒப்பற்ற செய்திகளையும் குறித்துப் பாடினேமே, கேட்கவில்லையா?' என்றுகேட்கிருள்.

'இது என்ன தூக்கமோ தெரியவில்லையே அம்மா! தூக்கத்திற்கும் இப்படி ஒரு வாழ்வு வந்துவிட்டது போலும்!' என்று சொல்லி உண்மையாகத் தோழியை வாழ்த்துகிருள். 'வாய்திறந்து பேசமாட்டாயா?' என்று கேட்கிருள்.

'இறைவன் அன்புக்கடல்; அவன்மீது அன்புடைமையை நீ இப்படியா இப்பொழுது வெளியிடுவது?' என்று அதிசயிக்கிருள்.

உயிர்களெல்லாம் ஒடுங்கி நிற்கும் ஊழிக்காலத்திலும் ஒரு தனித் தலைவனாகி அருட் சக்தியாகிய அம்மையை என்றும் பிரியாது பக்கத்தில் கொண்டிருக்கும் சிவபெருமானையே பாடு—என்று கூறி முடிக்கிறாள்.

இசைவாணர்கள் அதிகாலையில் எழுந்து இசைப் பயிற்சி செய்வது வழக்கமல்லவா? அந்த இசை கேட்டுச் சங்கு ஊதுவோரும் விழித்துக்கொண்டு சங்கொலி எழுப்புகிறார்களாம். கோழி கூவக் கேட்டு வேறு பறவைகள் கத்துகின்றன என்றும் இசை வாணர்களின் இசை கேட்டுச் சங்கு ஊதுவோர் சங்கொலி எழுப்புகின்றனர் என்றும் பொருள்படப் பேசியவள், 'அப்படியே நாங்கள் விழித்தெழுந்து பாடியும், நீ துயிலொழிந்து உத்சாக மடைந்து எங்களோடு கலந்து பாடினாய் இல்லையே!' என்கிறாள்.

ஊழி முதல்வனாகவும் ஏழை பங்காளனாகவும் உள்ள இறைவன் நம்மையும் பிரியாது கலந்து வாழ்கின்றான் என்ற தனிப்பெருஞ் செய்தி இப்பாட்டின் புதை பொருளாகும். இறைவனைப் பாடி மார்கழி நீராடுவது அவனோடு பிரியாது கலந்து வாழ்வதற்கு ஓர் உபாயம் ஆகும் என்பதும் பாட்டின் உட்பொருள்.

உள்ளுறை

சேட்டை முதலான சக்திகள் வாமை என்ற சக்தியை எழுப்புவதுஇப்பாட்டின் உள்ளுறைபொருள் என்பர். வாமையும் வந்து எண்மருடன்கூடவே, ஒன்பது சக்திகளும் ஒன்று சேர்ந்து விடுகிறார்கள்.

எழுந்த கன்னியர் இறைவனை வேண்டுகிறார்கள்

முன்னைப் பழம்பொருட்கும்
    முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும்
    போர்த்தும்அப் பெற்றியனே!
உன்னைப் பிரானாகப்
    பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம்;
    ஆங்கவர்க்கே பாங்காவோம்;
அன்னவரே எம்கணவர்
    ஆவார்; அவர் உகந்து
சொன்ன பரிசே
    தொழும்பாய்ப் பணிசெய்வோம்;
இன்ன வகையே
    எமக்(கு) எம்கோன்! நல்குதியேல்,
என்ன குறையும்
    இலோம்ஏலோர் எம்பாவாய். (9)

பதவுரை

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே - முற்பட்ட பழையனவாகிய பொருள் களுக்கும் அப்படியே முற்பட்ட பழைய பொருளாக இருப்பவனே!

பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே- பிற்பட்ட புதுமைப் பொருளுக்கும் அப்படியே பிற் பட்ட 'புதுப் புதுப் புதுமை' என்று சொல்லுமாறு அத்தகைய புதுமைப் பொருளாக உள்ள தன்மை உள்ளவனே!

உன்னைப் பிரானாகப் பெற்ற- இத்தகைய உன்னைத் தலைவனாகப் பெற்ற

உன் சீர் அடியோம்- உன்னுடைய அடித் தொண்டு புரிதலால் சீர்மை பெற்றிருக்கும் அடியவர் களாகிய நாங்கள்

உன்னடியார் தாள் பணிவோம் - உன் அடியவர்கள் திருவடிகளையே பணிந்து வருவோம்;

ஆங்கு அவர்க்கே பாங்கு ஆவோம்- உனக்குப் பாங்கா யிருக்கும் அவர்களுக்கே நாங்களும் பாங்காகி இருப்போம்; அந்த அடியவர்களே எங்களுக்குப் பாங்கர்கள் அல்லது நண்பர்கள் ஆகவேண்டும் என்று விரும்புகிறோம்.

அன்னவரே எம் கணவர் ஆவார்- அந்த அடியவர் களில் ஒருவரே எங்கள் ஒவ்வொருவருக்கும் கணவராக வாய்க்கவேண்டும் என்று விரும்பு கிறோம்;

அவர் உகந்து சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்- அவர் விரும்பிச் சொல்லுகிறபடியே

(கற்பிக்கிறபடியே) நாங்களும் விருப்பம் கொண்டு ஒவ்வொருவரும் அடிமையாகப் பணி செய்ய விரும்புகிறோம்.

இன்ன வகையே எமக்கு எம் கோன் நல்குதியேல் - எங்கள் அரசே! இந்த வகையாக நீ எங்களுக்கு அருள் புரிந்து விட்டால்

என்ன குறையும் இலோம் - எவ்வகையான குறையும் எங்களுக்கு இல்லாதவராவோம்.

சீர்- மிகு புகழ்.

விளக்கம்

முன்னைப் பழம் பொருளுக்கும் முன்னைப் பழம் பொருளாக இருக்கிறன் ஈசன். அப்படியே பின்னைப் புதுமைக்கும் புதுமையாகக் காணப்படுகிறனும். 'அத்த கைய இறைவனே! என்று விளித்துக் கன்னியர் பிரார்த்தனை செய்துகொள்கின்றார்.

'உன்னைப் பிரானைகப் பெற்ற பாக்கியசாலியான எங்களுக்கு உன்-''அடியார்க்குஅடியார்''-என்ற பெரும் பேர்தான் இனி வேண்டியது' என்கிறார்கள். இது முதலாவது வேண்டுகோள்.

'அவர்களுக்கே நாங்கள் பாங்கர் அல்லது நண்பர்களாவோம்' என்றும் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறார்கள். அத்தகைய ஸத் ஸங்கம் இவர்களது இரண்டாவது வேண்டுகோள்.

'அடியவர்களேஎங்களுக்குக் கணவராகவேண்டும் என்பது இக்கன்னியரின் மூன்றாவது வேண்டுகோள். இம் மார்கழி நீராடவே, உன் அடியாரையே கணவ

ராக நாங்கள் பெற்று உய்யும்படி நீ அருள் புரிவாயா ஞல் எங்களுக்கு ஒரு குறையும் இல்லை' என்கிருர்கள்.

அந்த இல்லாளர்களுக்கு இல்லக் கிழத்தியராகி நாங்கள் அவர்கள் கற்பிக்கிறபடியே கற்பு நெறியில் நின்று பணி செய்ய விரும்புகிருேம், என்கிருர்கள் அடிமையாய்ப் பணி செய்வோம், என்கிருர்கள்- காதல் உள்ள இடத்தில் அடிமையாகப் பணி செய்வது இன்பம் தானே!

'சங்கற்பம்' என்ற கிரியை இது. பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் விளங்குகின்ற இறையுண்மையை இப்பாட்டின் முதலிரண்டு அடிகள் எவ்வளவு அழகாக வெளியிடுகின்றன!

'உகந்து சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிப் செய்வோம்' என்பதில் அவர்கள் உகப்பே இவர்களுக்கும் உகப்பாகும் என்பதும், அவர்கள் விரும்பாதன இவர்களும் விரும்பாதனவே என்பதும் குறிப்பு.

வேண்டுகோள் மூன்ருகத் தோன்றினுலும் இவர்களுக்குக் குறை ஒன்றே; இந்தக்குறை நீங்கவே எல்லாக் குறைகளும் நீங்கப் பெற்றவராவோம் என்பது பாட்டின் தேர்ந்த கருத்து. இதனுல் மார்கழி நீராடுவதற்குச் சங்கற்பம் செய்து கொண்டு அதன் பயனை வேண்டுகிருர் என்று சொல்ல வேண்டும்.

உள்ளுறை,

நவ சக்திகள் ஒன்று கூடி இறைவன் பெருமையையும் ஆட்கொண்ட தன்மையையும் பேசித் தங்கள் உறுதியை விண்ணப்பித்தது இப்பாட்டின் உள்ளுறை பொருள் என்பர்.

இறைவனது ஊர் பேர் முதலியன வினவுதல்

பாதாளம் ஏழினும்கீழ்
சொற்கழிவு பாதமலர்;

போதார் புனைமுடியும்
எல்லாப் பொருள்முடிவே!

பேதை ஒருபால்
திருமேனி ஒன்றல்லன்;

வேதமுதல் விண்ணோரும்
மண்ணும் துதித்தாலும்

ஓத உலவா
ஒருதோழன்; தொண்டருளன்

கோதில் குலத்தரன்தன்
கோயிற் பிணாப்பிள்ளைகாள்!

ஏதவன்ஊர்? ஏதவன்பேர்?
ஆர்உற்றார்? ஆர்அயலார்?

ஏதவனைப் பாடும்
பரிசேலோர் எம்பாவாய். (10)

பதவுரை

பாதாளம் ஏழினும் கீழ்-கீழ் உலகம் ஏழினுக்கும்கீழாக,

சொற்கழிவு பாதமலர் - சொல்லுக்கு அடங்காத நிலையில் உள்ளன இறைவனுடைய பாதமலர்கள்;

போது ஆர் புனைமுடியும் - மலரணிந்த திருமுடியும்

எல்லாப் பொருள் முடிவே - எல்லாப் பொருள்களின் முடிவாக உள்ளது.

பேதை ஒரு பால் திருமேனி ஒன்று அல்லன் - உமா தேவியை ஒரு பாகமாகக்கொண்ட திருமேனி ஒன்றுதான் உடையவன் என்பதில்லை.

வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும் - வேதத்தை முதலாகக் கொண்டு விண்ணோரும் மண்ணுலகத்தவரும் துதித்தாலும்,

ஓத உலவா ஒரு தோழன்-அப்படித் துதித்து ஓதுகிற அந்தப் புகழ்ச்சியையும் கடந்து நிற்கும் ஒப்பற்ற தோழன்

தொண்டர் உளன் - தொண்டர்களின் உள்ளத்திலே உள்ளவன்

கோதில் குலத்து அரன்தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்! - குற்றமற்ற திருக்கூட்டத்தினரும் சிவபெருமான் திருக்கோயிலில் பணிகளுக்கு உரிமை பூண்டவர்களுமான பெண்பிள்ளைகளே!

ஏது அவன் ஊர்-அந்தப்பெருமானுடைய ஊர் யாது?

ஏது அவன் பேர்? - அவன் பெயர் யாது?

ஆர் உற்றார்? - அவனுக்கு உறவினர் யார்?

ஆர் அயலார்? - அயலார் யார்?

ஏது அவனைப் பாடும் பரிசு - அவனைப் பாடும் தன்மைதான் யாது?

'போதுஆர் புனைமுடி' என்பதில் 'போது' ஆத்திமாலை

யைக் குறிக்கும். ஆத்திமாலை சிவபெருமானுக்கு உரியது.

பேதை-பெண்; (இங்கே) உமாதேவி. 'ஒரு பால்' - ஒரு பாகம்; (இங்கே) இடப்பாகம்.

'பேதை ஒருபால் திருமேனி' அர்த்த நாரீச்வரத் திருமேனி

'சொற்கழிவு' - சொல்லின் எல்லை கழிந்த,

'சொற்கழிவு' பாதமலர்; 'பொருள் முடிவு'திருமேனி. உமாதேவி ஒரு பாகத்திலிருப்பதால் திருமேனி ஒன்றல்லன் என்று கூறுவதும் உண்டு. 'வேத முதல்' பிரணவம் என்பதும் உண்டு; 'வேதமுதல் வன்' என்று பொருள் கூறுவதும் உண்டு. பிணைப்பிள்ளை-பெண் பிள்ளை.

உள்ளுறை

குற்றமற்ற கூட்டத்தினராகவும், அரனது திருக் கோயிலில்பணி புரிய உரிமை பூண்டவருமான பெண் களே! உங்களிடம் சில கேள்விகள் கேட்கவேண்டும்.

இறைவனுடைய பாதமலர் கீழ் ஏழ் உலகத்திற் கும் கீழாகச் செல்லுகிறது; சொல்லின் எல்லை கடந்து செல்லுகிறது. ஆத்திமாலை சூடிய திருமுடியோ எல்லாப் பொருள் முடிவாகவும் உள்ளது.

இறைவனுக்கு அர்த்தநாரீச்வரத் திருமேனி ஒன்றுதானா உரியது? வேதத்தைமுதலாகக் கொண்டு விண்ணும் மண்ணும் துதித்து ஓதிஓதிப் பார்த்தாலும் அந்தப் புகழ்ச்சியை யெல்லாம் கடந்து நிற்பவன் இறைவன்.

எனினும் ஒப்பற்ற தோழனாகத் திகழ்கின்றான், தொண்டர் உள்ளத்தில் கோயில்கொண்டிருக்கிறான்.;

அப்பேர்ப்பட்ட இறைவனுடைய ஊர் யாது? பேர்தான் யாது? அவனுக்கு உறவினன் யார்? அயலார் யார்? அவனைப் பாடும் தன்மைதான் யாது? இந்த வினைக்களுக்கு விடைகூற வேண்டும், திருக் கோயிலில் பணி புரியும் பெண் மக்களே! இப்படி வேண்டிக் கொள்கிறார்கள் கன்னிப் பெண்கள்.

திருவடி பாதாளம் ஏழையும் ஊடுருவி விரிந்து செல்லுகிறது. திருமுடியோ அப்பாலுக்கு அப்பாலாகி எல்லாப் பொருள் முடிவாகவும் உயர்ந்துள்ளது. இப்படிக் கூறுவதால் இறைவன் எங்குமாகி எல்லா வற்றையும் கடந்துநிற்கும்நிலைவற்புறுத்தப்படுகிறது.

'திருவடியாய் விரிந்தும் திருமுடியாய் நுணுகி யும்........சொற்கழிந்து நிற்பினும்', "பேதை ஒருபால் திருமேனி" முதலிய பல எல்லைப்படுத்தப்பட்ட 'திரு மேனிகள் உடையனுய்த் துதியுள் அகப்பட்டு நிற்பான் போலத் தோன்றலும் உரியன்' என்பர் பண்டிதமணி திரு. நவநீதகிருஷ்ண பாரதியார், தமது திருவாசக - ஆராய்ச்சிப் பேருரையிலே.

அர்த்தநாரீச்வரத்திருமேனி ஒன்றேஉடையவன் இறைவன் என்று கருதுவது தவறு. இறைவனுக்குத் திருமேனிகள் பல. 'ஒப்புடையனல்லன்; ஒருவன் அல் லன்; ஓர் ஊரூரன் அல்லன்'என்பர்அப்பர்சுவாமிகளும். எப்படி எப்படிப் புகழ்ந்துபார்த்தாலும் அந்தப்புகழ்ச்சி களையும் தோத்திரங்களையும் கடந்து நிற்பவன்; எத்தகைய ஆராய்ச்சிகளையும் கடந்து நிற்பவன்.

'கோயிற்பிணைப் பிள்ளைகளை உருத்திர கணிகை யர்' என்று கொள்வோரும் உண்டு. இவர்களைக் கோதில் குலத்தவர், நற்குலத்திலுதித்தவர் என்பது கவனிக்கத் தக்கது.

‘காப்பாய்’ என்று துதித்து நீராடுதல்

மொய்யார் தடம்பொய்கை
புக்கு முகேரென்னக்

கையால் குடைந்து
குடைந்துன் கழல்பாடி

ஐயா! வழிஅடியோம்
வாழ்ந்தோங்காண்! ஆரழல்போல்

செய்யா! வெண் ணீருடி!
செல்வா! சிறுமருங்குல்

மையார் தடங்கண்
மடந்தை மணவாளா!

ஐயாநீ ஆட்கொண்
டருளும் விளையாட்டின்

உய்வார்கள் உய்யும்
வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்;

எய்யாமல் காப்பாய்
எமையேலோர் எம்பாவாய். (11)

பதவுரை

மொய் ஆர் தடம் பொய்கை புக்கு - பூக்கள் நிறைந்து அகன்ற திருக்குளத்தில் புகுந்து

முகேர் என்னக் கையால் குடைந்து குடைந்து- 'முகேர்' என்னும் ஒலி உண்டாகும்படி கையால் இறைத்து முழுகி முழுகி,

உன்கழல் பாடி - உன் திருவடிகளைப் பாடி,

ஐயா! வழி அடியோம் வாழ்ந்தோம் காண் - எங்கள் தலைவனே! வழி வழி அடிமைகளாகிய நாங்கள் நல்ல வண்ணம் வாழ்வு பெற்றோம்;

ஆர் அழல் போல் செய்யா! - நிறைந்த நெருப்புப் போன்ற செந்நிறத் திருமேனி உடையவனே!

வெண்ணீறு ஆடி - அத்திருமேனியில் வெண்ணீறு அணிந்தவனே!

செல்வா! - எங்கள் செல்வமாகிய பெருமானே!

சிறு மருங்குல் மையார் தடங்கண் மடந்தை மணவாளா! - சிறிய இடையையும் மை தீட்டிய பெரிய கண்களையும் உடைய உமாதேவியின் கணவனே!

ஐயா! நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின் - அழகாக நீ உயிர்களை அடிமை கொண்டருளும் அன்புத் திருவிளையாட்டினால்

உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந் தொழிந்தோம்-உய்தி பெறும் அன்பர்கள் உய்யும் வகைகள் எல்லாம் நாங்களும் பெற்றுப் பிழைத்து ஈடேறிவிட்டோம்;

எய்யாமல் காப்பாய் எமை - இனி நாங்கள் எய்த்துப் போகாதபடி எங்களைக் காத்து வருவாயாக.

'மொய்' - 'வண்டுகள் மொய்க்கின்ற' என்றும் பொருள் கொள்ளலாம்.

'முகேர்' - கையால் நீரைக் குடையும்போது உண் டாகும் ஒலிக் குறிப்பு,

'ஐயா நீ' - அழகாக நீ. 'ஐ ஆம் நீ' என்று கொண்டு 'ஆண்டவனுகிய நீ' என்றும் பொருள் கொள்ள லாம்.

'பொய்கை' - இயற்கையாகத் தோன்றிய நீர்நிலே;

விளக்கம்

பெண்கள் இறைவனே நோக்கி, 'ஐயா' என்று அழைத்து, 'நாங்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந் தொழிந்தோம்; இன்னும் அப்படியே எங்களே வருந் தாமல் காப்பாற்றி வருவாயாக' என்று நீராடுகிருர்கள். 'ஐயா!' என்பதற்குத் 'தலேவனே!' என்றும், 'அழகனே!' என்றும் பொருள் கொள்ளலாம். 'நிறைந்த தீப் போன்ற செந்நிற மேனியனே!' என்றும் 'அம்மேனி யில் முழு வெண்ணீறு பூசி இருப்பவனே!' என்றும் தோத்திரம் செய்கிருர்கள். அவனேச் 'செல்வா!' என்று அருமையாக அழைக்கிருர்கள்.

'சிறிய இடையும் மை தீட்டிய பெரிய கண்களேயும் உடைய உமையம்மையின் மணவாளனே!' என்றும் அம்மையப்பனுகிய இறைவனேப் போற்றுகிருர்கள்.

பூக்களும் பூக்களில் வண்டுகளும் நிறைந்திருக்கும் அகன்ற பொய்கையில் புகுந்து முழுகி முழுகி உன் திருவடிகளேப் பாடி வழிவழி அடியார்களாகிய நாங்கள் வாழ்வு பெற்ருேம் என்கிருர்கள். அப்படி முழுகும் போது கையால் 'முகேர்' என்ற ஒலியை உண்டாக்கு கிருர்களாம்.

பிறகு இறைவன் அழகாய் ஆட்கொண்டு வரும் அன்புத் திருவிளையாட்டைக் குறிப்பிடுகிருர்கள். குறிப்பிட்டு, அந்தத் திருவிளையாட்டினுல் உய்வார்கள். உய்யும் வகையெல்லாம் நாங்களும் பெற்று உய்ந்து விட்டோம் என்கிருர்கள்.

'அப்படியே இனிமேலும் எங்களை வருந்த விடாமல் காத்து வருவாயாக இறைவனே!' - என்ற பிரார்த்தனையுடன் நீராடுகிருர்கள்.

வழிஅடியார் ஆனதால் இறைவனைப் பாடவும் மார்கழி நீராடவும், அடியாரைக் கணவராகப் பெறவும் வசதி கிடைக்கிறது என்பது குறிப்பு.

'வருந்தாது பேறுகள் பெற்று வந்திருக்கும் வழி அடியார்களாகிய நாங்கள் இனிமேலும் வருந்தாமல் நல்ல வண்ணம் வாழ்ந்து உய்திபெற விரும்புகிருேம். தலைவனும் அழகனும் ஆகிய நீ காத்து வருவாயாக -'

'வெண்ணீறு ஆடி!' 'மணவாளா!' என்று இறைவனை அழைப்பது அவனது உருவத் திருமேனியைக் குறிப்பது. இறைவனுக்கு உருமேனியும் உண்டு; உரு இறந்த அருமேனியும் உண்டு. அரு உரு என்ற உபய மேனியும் உண்டு என்பர். உபயமேனியும் கருணையின் வடிவு என்பது சிவஞானியர் துணிபு.

இறைவனைப் புகழ்ந்துபேசித் திருவடியேத்திச் சுனைநீராடுதல்

ஆர்த்த பிறவித்
துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்,நல் தில்லைச்சிற்
றம்பலத்தே தீஆடும்
கூத்தன்,இவ் வானும்
குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும்
கரந்தும் விளையாடி!
வார்த்தையும் பேசி
வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய
அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை
குடைந்(து)உடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர்
ஆடேலோர் எம்பாவாய். (12)

பதவுரை

ஆர்த்த பிறவித்துயர் கெட-நம்மைப் பிணித்த பிறவித் துயரம் கெட்டு ஒழியும்படி

நாம் ஆர்த்து ஆடும் தீர்த்தன் - நாம் மகிழ்வுடன் ஆர வாரித்து முழுகும் தீர்த்தத்தையுடையவனும்,

நல் தில்லைச் சிற்றம்பலத்தே தீ ஆடும் கூத்தன் - நல்ல தில்லையிலுள்ள ஞான வெளியாகிய அம்பலத்தில் ஞான ஒளியாக அனலேந்தி ஆடுகின்ற அருட் கூத்து உடையவனும்,

இவ்வானும் குவலயமும் எல்லோமும் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி - இந்த நிலவுலகத் தையும் வானுலகத்தையும் நம் எல்லோரையும் ஆக்கியும் காத்தும் ஒடுக்கியும் விளையாடுபவனு மாகிய இறைவனைப்பற்றிய,

வார்த்தையும் பேசி - வார்த்தைகளையும் பேசி,

வளை சிலம்ப - கை வளைகள் ஒலிக்க,

வார் கலைகள் ஆர்ப்பரவம் செய்ய - நீண்டமேகலை முதலிய அணிகள் ஆரவாரஞ் செய்ய,

அணிகுழல் மேல் வண்டு ஆர்ப்ப - அழகிய கூந்தலின் மேல் வண்டுகள் எழுந்து ஆரவாரிக்க,

பூத்திகழும் பொய்கை குடைந்து - பூக்கள் நிகழும் பொய்கையில் முழுகி,

உடையான் பொற்பாதம் ஏத்தி - எல்லாம் உடைய வனும் எங்களை அடிமையாக உடையவனுமாகிய சிவபெருமானுடையபொற்பாதங்களைப் பாராட்டி வணங்கி,

இருஞ்சுனை நீர் ஆடு - பெரிய சுனை நீரிலும் முழுகு வோம் ஆக.

விளக்கம்

இறைவனைப் புகழ்ந்து பேசி அவன் திருவடிகளை ஏத்திச் சுனை நீராட வந்தவர்கள், 'நம்மைக் கட்டிய பிறவித்துன்பம் கெட்டு ஒழியும்படி நாம் மகிழ்ந்து முழுகும் தீர்த்தன் சிவபெருமானே என்கிறார்கள்.

அவனே தில்லை வெளி என்கிற ஞான வெளியிலே ஞான ஒளியாக அருட்கூத்து ஆடுகின்ற கூத்தனைக் காட்சியளிக்கிறான் என்கிறார்கள்.

தீர்த்தனைகவும் கூத்தனைகவும் உள்ள பெருமான் வானத்தையும் பூமியையும் உயிர்க் கூட்டத்தையும் படைத்துக் காத்து ஒடுக்கி விளையாடுகிறான் என்கிறார்கள். அந்த இறைவனைப் புகழ்ந்து பேசும் பேச்சுக் களில் ஈடுபடுகிறார்கள்.

வளைகள் ஒலிக்க, மேகலைகள் முதலிய அணிகளும் ஒலி செய்ய, அழகிய கூந்தலின் மேல் வண்டுகள் எழுந்து ரீங்காரம் செய்ய, பூக்கள் நிகழும் பொய்கை யிலே முன்பு நீராடி, எல்லாம் உடையவனும் நம்மை அடிமையாக உடையவனுமாகிய இறைவனது பொற் பாதம் ஏத்தி, அதன்பின் சுனையிலுள்ள கரிய நீரிலே மூழ்குவோமாக என்கிறார்கள்.

'ஆர்த்த' - கட்டிய; பிணித்த.

'ஆர்த்து ஆடும்'-ஆரவாரம்செய்து நீராடுகின்ற

'தீர்த்தன்' - தூய்மையானவன்; தூய்மை செய்வோன், விளையாடி - விளையாடுபவனே! பெயர்; அண்மை விளி, படைத்தல் காத்தல் முதலான ஐந்து தொழில்களை ஆற்றுவது இறைவனுக்கு விளையாட்டு.

'நாம் ஆர்த்து ஆடும் தீர்த்தன்' என்பதில் 'இறைவனுடைய குணமாகிற தீர்த்தத்தில் மனம் மூழ்கித் துயர் கெடவேண்டும் என்பது குறிப்பு.

அன்பர்கள் ஆனந்தமாகிய தீர்த்தத்தில் நல்ல வண்ணம் வாழவேண்டும் என்பதற்காகத் தில்லைச் சிற்றம்பலத்தில் இறைவன் கூத்தனுகக் காட்சி தரு கின்ருன் என்பது 'தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன்' என்பதில் உள்ள புதைபொருள்.

நாள்தோறும் பொய்கையில் நீராடுவதாகவும் விசேஷ தினங்களில் சுனைநீரிலும் ஆடுவதாகவும் கருதலாம்.

அம்மையப்பரை நினைவூட்டும் நீரில் ஆடுதல்

பைங்குவளைக் கார்மலரால்,
செங்கமலப் பைம்போதால்,

அங்கங் குருகினத்தால்
பின்னும் அரவத்தால்

தங்கள் மலங்கழுவு
வார்வந்து சார்தலினல்,

எங்கள் பிராட்டியும்
எங்கோனும் போன்றிசைந்த

பொங்கு மடுவில்
புகப்பாய்ந்து பாய்ந்துநம்

சங்கம் சிலம்பச்
சிலம்பு கலந்தார்ப்பக்

கொங்கைகள் பொங்கக்
குடையும்; புனல்பொங்கப்

பங்கயப் பூம்புனல்பாய்ந்
தாடேலோர் எம்பாவாய். (13)

பதவுரை;

பைங்குவளைக் கார் மலரால் - குளிர்ந்த கரிய குவளை மலராலும்,

செங்கமலப் பைம்போதால் - அழகிய செந்தாமரை மலராலும்,

அங்கம் குருகு இனத்தால் - அழகிய நீர் வாழ் பறவைகளை உடைமையாலும்

இதற்கு வேருெரு பொருள்: அங்கமாகிய கையில் வளையல்கள் பல அடுக்கிக்கொண்டிருப்பதாலும்,

பின்னும் அரவத்தால் - பின்னித் தொடர்ந்து எழும் ஒலியுடைமையாலும்,

வேருெரு பொருள்: பின்னிக்கிடக்கும்பாம்புகளாலும்,

தங்கள் மலம் கழுவுவார் வந்து - தங்கள் அழுக்கைக் கழுவுவோர் வந்து சேர்தலாலும்,

எங்கள் பிராட்டியும் எம்கோனும் போன்று இசைந்த - எங்கள் உமையம்மையையும் எம் இறைவனையும் ஒத்து இசைந்திருக்கும்

பொங்கும் மடுவில் - நீர் பொங்கும் பொய்கையில்

புகப்பாய்ந்து பாய்ந்து - பாய்ந்து பாய்ந்து புகுதலால்

நம் சங்கம் சிலம்ப - நமது கை வளைகள் ஒலிக்கவும்,

சிலம்பு கலந்து ஆர்ப்ப - காலணியாகிய சிலம்புகள் வளைகளின் ஒலிகளோடு கலந்து ஒலிக்கவும்,

கொங்கைகள் பொங்க - உள்ளக் கிளர்ச்சியால் மார்புகள் பூரிக்கவும்,

குடையும் புனல் பொங்க - முழுகும் நீர் மேலெழுந்து பொங்கவும்,

பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடு - தாமரைப் பூக்களால் விளங்கும் பொய்கையின் அழகிய நீரில்

பாய்ந்து குதித்து நீராடுவோமாக
அங்கம் - இடம்; அழகு; உறுப்பாகிய கை.
குருகு - நீர்ப் பறவை; வளையல்
இனம் - பல
'பின்னும் அரவம்' - பின்னிப் பிணைந்துகொள்ளும் பாம்பு போன்ற கூந்தல் - பின்னலையும் குறிக்கும்.
அழுக்கு - உடலின் அழுக்கோடு உயிரின் அழுக்கையும் குறிக்கும்.

விளக்கம்

குவளை மலரின் நீல நிறத்தால் பொய்கை உமையம்மைக்கு ஒப்பாகும். 'அங்கம் குருகு இனம்' அடுக்கிய பல கை வளையல்களையும் குறிப்பதால் பொய்கைக்கும் பிராட்டிக்கும் சிலேடை ஆகிறது.

இவ்விதமாக அம்மையுடன் ஒப்பிடப் பெறும் பொய்கை எம்கோனாகிய அப்பனுக்கும் ஒப்பாகிறதாம். பொய்கையின் செந்தாமரைப் பூக்கள் இறைவனது தீ வண்ணத்தை நினைவூட்டுகின்றன. பின்னும் அரவம், பின்னிக் கிடக்கும் சர்ப்பமாகிய ஆபரணங்களையும் நினைவூட்டுவதால் பொய்கைக்கும் சிவபெருமானுக்கும் சிலேடை கிடைக்கிறது. அழுக்கைக் கழுவுவார் வந்து சார்வது பொய்கைக்குப் பொருந்துவதுடன் அம்மை அப்பன் ஆகிய இருவருக்கும் சேர்ந்த ஒப்பாகும்.

கூந்தல்-பின்னலாகிய அரவத்தை யுடைமையால் 'பின்னும் அரவத்தால்' என்பதும் பிராட்டியைக் குறிக்கும் என்பர்.

குவளை நிறமுடைய உமையம்மையின் திருவாயும்

திருக்கைகளும் திருவடிகளும் செந்தாமரையின் செந் நிறம் காட்டுவதால் 'செங்கமலப் பைம்போதால்' என்பதும் உமையம்மைக்குப் பொருந்தும் என்பர்.

'பைங்குவளைக் கார் மலர்' இறைவனது நீலகண்டத்தை நினைவூட்டும் என்று கூறி, 'பைங் குவளைக் கார் மலரால்' என்பது இறைவனுக்கும் பொருந்தும் என்பர். 'அங்கம் குருகு இனத்தால்' என்பது அடையாளமாகக் குருக்கத்தி மலர் மாலை அணிந்திருக்கும் சிவபெருமானையும் குறிக்கும் என்பர். இப்பொருளில், அங்கம் -அடையாளம்; குருகு இனம்- குறுக்கத்தி இனமாகிய மலர் மாலை.

அம்மையப்பரின் அருள் வெள்ளத்தில் தோய் வதை மடுவில் குடைந்து ஆடுவது நினைவூட்டுகிறது.

உள்ளுறை

சிவதீட்சை முறையைக் கார்மலரும் கமலமும் குருகினமும் அரவமும் நினைவூட்டும் என்பர். அம் முறையில் நான்கு அம்சங்களாகக் காண்பதையும் கருதுவதையும் தீண்டுவதையும் அருமறையாகிய உபதேசம் பெறுவதையும் குறிப்பிடுவர். கண்ணை ஒத்த குவளை மலர், காண்டலின் நினைவுக் குறி. கமலம் இதய கமலத்தின் - அதாவது கருதலின் - அறிகுறி. சிறகால் குஞ்சை அணைத்துக்கொள்ளும் பறவை, குரு தீண்டித் தன் ஆதரவில் சீடனை வைத்துக் கொள்வதை நினைவூட்டுகிறது. ஓசை ஆகிய அரவம் அருமறையின் சாரமாகிய ஐந்து எழுத்தை உபதேசிப் பதற்கு அறிகுறி.

அம்மை அடிவாழ்த்தி
நீராடுதல்

காதார் குழையாடப்
பைம்பூண் கலனாடக்

கோதை குழலாட
வண்டின் குழாமாடச்

சீதப் புனலாடிச்
சிற்றம் பலம்பாடி

வேதப் பொருள்பாடி
அப்பொருளா மாபாடிச்

சோதி திறம்பாடிச்
சூழ்கொன்றைத் தார்பாடி

ஆதி திறம்பாடி
அந்தமா மாபாடிப்

பேதித்து நம்மை
வளர்த்தெடுத்த பெய்வளைதன்

பாதத் திறம்பாடி
ஆடேலோர் எம்பாவாய். (14)

பதவுரை

காதார் குழையாட - காதில் பொருந்திய தோ்டு ஆடவும்

பைம்பூண் கலன் ஆட - உடம்பில் அணிந்த மற்றைய அணிகள் ஆடவும்

கோதை குழல் ஆட - தலையில் சூட்டிய மாலையோடு கூந்தலும் ஆடவும்

வண்டின் குழாம் ஆட - மாலையைச் சுற்றி வண்டுக் கூட்டங்கள் சுழன்று ஆடவும்

சீதப் புனல் ஆடி - குளிர்ந்த நீரில் மூழ்கி

சிற்றம்பலம் பாடி - தில்லைச் சிற்றம்பலத்தைப் பாடியும்

வேதப்பொருள் பாடி - வேதத்தின் உட்பொருளைப் பாடியும்

அப்பொருள் ஆமா பாடி - அந்த உட்பொருளே இறைவனாகும் விதத்தைப் பாடியும்

சோதி திறம்பாடி - ஜோதியாக நிற்கும் பெருமானது திறத்தைப் பாடியும்

சூழ் கொன்றைத்தார் பாடி - அப்பெருமான் தன்னுடைய முடியில் சிறப்பாக அணிந்திருக்கும் கொன்றை மாலையைப் பாடியும்

ஆதி திறம்பாடி அந்தம் ஆமா பாடி - ஆதியும் அந்தமுமாக உள்ள அந்த நிலையைப் பாடியும்

பேதித்து - வேறு படுத்தி, மலங்களிலிருந்து வேறு படுத்தி

வளர்த்தெடுத்த பெய்வளைதன் - நம்மை வளர்த்து எடுத்த, வளைகள் அணிந்த, அம்மையின்

பாதத்திறம் பாடி-திருவடியின் இயல்புகளைப் பாடியும்

ஆடு - நாம் நீராடுவோமாக.
'கலன்' பொதுவாக அணியென்றும்,
'குழை' பொதுவாகக் காதணி என்றும் பொருள்படும்.
'அப்பொருள் ஆமா பாடி' - 'அகாரப் பொருளாய் இறைவன் இருப்பதைப் பாடி' என்றும் கூறுவர்.
'ஆமா' - ஆமாறு.

விளக்கம்

காதணிகளும் வேறு அணிகலன்களும் ஆட, மாலேயும் கூந்தலும் மாலேயைச் சூழ்ந்து சுழலும். வண்டுக் கூட்டங்களுடன் ஆட, நாம் குளிர்ந்த புனல் ஆடுவோம் என்கிருர்கள்.

சிற்றம்பலத்தையும் வேதப் பொருளேயும் அப் பொருளாக இறைவன் இருப்பதையும், ஜோதியாக நிற்கும் அந்த இறை நிலேயையும், கொன்றை மாலே அணிந்திருக்கும் அந்தப் புராதன உருவ நிலேயையும் பாடி நீராடுவோம் என்கிருர்கள்.

எல்லாவற்றுக்கும் முதலும் முடிவுமாக நிற்கும் அந்த இறை நிலேயையும் பாடி நீராடுவோம் என்கிருர்கள்

கடைசியாக, நம்மை உயிரழுக்காகிய மலத்தி லிருந்து வேறுபடுத்தி வளர்த்து மேம்படச் செய்த அம்மையின் பாதத் திறம்பாடி நீராடுவோம் என்கிருர்கள்.

இந்த உலக அன்னேயைப் 'பெய்வளே' என்று குறிப்பிடுறது கலேத்திவன்.

அருளம்மையைப் பேதித்து நம்மை வளர்த் தெடுத்த பெய்வளே என்று குறிப்பிடுவதில் பக்திச்

சுவையுடன் கவிச் சுவையும் இசைந்து கலந்திருக் கிறது.

'பேதித்தல் - மறைத்தல்' என்றும், 'வளர்த்தெடுத் தல் - அருளுதல்' என்றும் கூறுவர்.

உயிர்களுக்கு உடல் உண்டி முதலியவற்றை மாயையிலிருந்து படைத்துக் கொடுத்து வினைப்பயன் அநுபவிக்குமாறு செய்வதும், இறைவனைக் காட்டா மல் பொய்யான உடம்பை மெய்யென நம்பச் செய்வதும் பேதித்தல் ஆகும். பிறகு உலக அன்னை அருள் செய்தல் வளர்த்தெடுத்தல் எனக் குறிக்கப்படுகிறது.

உள்ளுறை

இரும்பைப் பொன்னாக்குவதுபோலச் சிவ ஞானமாகிய இன்னமுதத்தால் பழைய 'பசுபோதம்' என்னும் கருமை நீங்க ஒளிதரும் அருட் சக்தியை 'வளர்த்தெடுத்த பெய்வளை' என்பது குறிப் பிடுகிறது. செயலற்றுக் கேவல நிலையில்— அதாவது ஆணவ மலப் பிணிப்பில், கட்டுண்டு கிடந்த உயிர்க ளாகிய நாம் ஏதோ ஒரு சக்தியால் சகலமும் பெற்றுப் பிரபஞ்ச வாழ்வு வாழ்கிறோமல்லவா? இப்படி ஆட் கொள்ளும் திருவருட் சக்திதான் உமையம்மை.

வித்தகர் தாள்பாடி நீராடுதல்

ஓரொருகால் எம்பெருமான்
என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள்
சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா
நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள்
விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே
பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம்
ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர்!
வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்(து)
ஆடேலோர் எம்பாவாய். (15)

பதவுரை

ஓர் ஒருகால் - ஒவ்வொரு பொழுது; இடையிடையே ஒவ்வொரு முறை,

எம்பெருமான் என்று என்றே நம்பெருமான் சீர் ஒருகால் வாய் ஓவாள் - எம்பெருமான் என்றென்று பலமுறை நம்பெருமானுகிய சிவபெருமானுடைய சிறப்புக்களை ஒருபொழுதேனும் ஒழிவில்லாமல் சொல்வதில் வாய் ஓயாதவளாகி,

சித்தம் களிகூர - உள்ளக் களிப்பு மிகும்படியாக,

நீர் ஒருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்ப - ஒருபோதேனும் ஒளிவில்லாமல் கண்கள் நெடிய தாரையைச் சொரிய,

பார் ஒருகால் வந்தனையாள் - பூமியிலே ஒரு முறை வந்து அவதரித்தாற்போன்ற இப்பெண்,

விண்ணோரைத் தான் பணியாள் - தான் விண்ணவர்களைப் பணியாதவளாய்,

பேர் அரையற்கு இங்ஙனே பித்து ஒருவர் ஆமாறும் ஆரொருவர் -பேரரசனுகிய சிவபெருமான் பொருட்டு ஒருவர் பித்துக்கொண்டிருப்பதும் இவ்வாறே என்று சொல்லும்படி வேறு யாரொருவர் இருக்க முடியும்?

இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள் - இவ்வண்ணம் பித்துடையவராக்கி ஆட்கொள்ளும் திறமைப்பாடுள்ள தலைவனது திருவடிகளை,

வாருருவப் பூண் முலையீர் - கச்சுக்கட்டி ஆபரணம் அணிந்த மார்புடையவர்களே,

வாயார நாம்பாடி - நாங்கள் வாயாரப்பாடி,

ஏர் உருவப் பூம்புனல் பாய்ந்து ஆடு - அழகாய்த்

தோன்றும் இந்த மடுவிலுள்ள அழகிய நீருக்குள் பாய்ந்து நீராடுவோம்.

'பார் ஒருகால் வந்தனையாள்' பூமியில் ஒரே முறையாக விழுந்து கும்பிடுகிறவள் என்று பொருள் கூறுவதும் உண்டு. வார் - கச்சு.

விளக்கம்

இயற்கையழகும் செயற்கையழகும் பொருந்திய பெண்களே! இடையிடையே ஒவ்வொருமுறை 'எம் பெருமான் என்று நம்பெருமானுடைய சிறப்புக்களை வாய் ஓயாமல் சொல்லிக்கொண்டே யிருக்கிருள் இந்தப் பெண் என்று தலைவி குறிக்கப்படுகின்ருள்.

'சித்தம் களிகூர' சித்தத்திலே உவகை அதிகரிக்க, ஒருபோதும் ஒழிவில்லாமல் கண்கள் நீர்த் தாரை சொரிய, அப்படிச் சொல்லிக் கொண்டிருக்கிருள்.

இந்தக் கோலத்தில் இவளைப் பார்த்தால் 'பார் ஒருகால் வந்தனையாள்' என்றே சொல்லத் தோன்றுகிறது. அதாவது, பூமியில் ஒரு முறைதான் இப்படி ஒருத்தி இவ்வளவு பக்தியுடன் தோன்றக் கூடும் என்றே நினைக்கத் தோன்றுகிறதாம்.

எத்தகைய உதவியை வேண்டியேனும் இவள் தன் தலைவனைத் தவிர மற்றைத் தேவரைக் குறித்து வணக்கம் செலுத்துவதே இல்லை. தெய்வப் பெரு வேந்தாகிய சிவபெருமான்மீது இப்படிப் பித்துக் கொண்டிருப்பவர், பக்திப் பித்துக்கே ஒருவர் என்று சொல்லும் நிலையிலிருப்பவர், வேறு யாரே இருக்க முடியும்?

இத்தகைய பக்திக் காதலைத் தந்தருளி ஆட் கொள்ளும் திறமைதான் தலைவனைத் தவிர வேறு எந்தத் தெய்வத்திற்குத்தான் இருக்கமுடியும்.

இத்தகைய இறைவனது திருவடிகளை நாம் வாயாரப்பாடி அழகான இந்த மடுவில் உத்ஸாக மாகப் பாய்ந்து குதித்து நீராடுவோம்.

இப்பாட்டில், 'பார் உருகால் வந்தனையாள்' என் பது வசீகரமான ஒரு சொற்றொடர். 'எம்பெருமான்' என்று இடையிடையே சொல்லும்போதும், வாய் ஓயாது அவன் சீரைச் சொல்லிக்கொண்டிருக்கும் போதும் ஏற்படுகின்ற சித்தக்களிப்பே இவளுக்கு ஒரு புதிய அழகு தருகின்றது. அந்தச் சித்தக் களிப்புடன் 'நெடுந்தாரை கண்பனிப்ப' இவள் இருக்கும் நிலை, 'பக்திக் காதலே இந்த உருவத்துடன் பாருக்கும் நம்முடைய ஊருக்கும் இறங்கிவந்து விட்டதோ!' என்று பார்ப்பவர்களைப் பிரமிக்கச் செய்கிறதாம், பரவசமாக்குகிறதாம்.

'ஏர் உருவப் பூம்புனல்' என்பது இவர்கள் நீராடு கின்ற மடுவின் ஓர் அழகிய சித்திரம். தன்னை நோக் கினவர்களுக்கு இனிய காட்சியளித்து மூழ்கிக் களிக்கச் செய்யும் பொலிவும் சிறப்பும் இந்நீர்நிலைக்கு உண்டு என்பது குறிப்பு.

உள்ளுறை

உலகத்தில் இருந்துகொண்டே உலகியலில் ஒட்டாமல் சிவத்தைச் சார்ந்திருக்கும் ஆத்மாவின் நிலையை ஒரு பெண்ணின்மேல் வைத்துப் பேசுகிறது இச்செய்யுள்.

பெண்களின் மழைப்பாட்டு

முன்னிக் கடலைச்
        சுருக்கி எழுந்(து)உடையாள்
என்னத் திகழ்ந்(து)எம்மை
        ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்(து),எம்
        பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற்
        சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி,
        நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா
        எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு
        முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய்
        மழையேலோர் எம்பாவாய். (16)

பதவுரை

முன் இக்கடலை சுருக்கி எழுந்து - முன்பு இக்கடல் நீரைத் தொகுத்து வானத்திலே மேக வடிவில் எழுந்து,

உடையாள் என்னத் திகழ்ந்து - எம்மைப் பொருளாக உடைய அம்மையின் திருமேனிபோல நிறம் பெற்றுத் திகழ்ந்து,

எம்மை ஆளுடையாள் இட்டிடையின் மின்னிப் பொலிந்து - எம்மை ஆட்கொண்டவளது சிற்றிடைபோல் மின்னிப் பொலிவுபெற்று,

எம்பிராட்டி திருவடிமேல் பொன்னஞ் சிலம்பிற் சிலம்பி - எம்பிராட்டியின் திருவடிமேல் விளங்கும் பொன்னாலாகிய அழகிய சிலம்பு ஒலிப்பது போல் இடித்து,

திருப்புருவம் என்னச் சிலை குலவி - அவளுடைய திருப்புருவம்போல வானவில்லை வளைத்து விளங்கச் செய்து,

நம் தம்மை ஆளுடையாள் தன்னிற் பிரிவிலா எம் கோமான் அன்பர்க்கு முன்னி - நம்மை ஆட்கொண்ட அன்னையினின்றும் பிரிதல் இல்லாத எம் தலைவனுடைய அன்பர்களுக்கு அருள் செய்வோம் என்று நினைத்து,

அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே என்ன - அந்த அன்னை நமக்கு முன் சுரந்தருளும் இனிய அருள்போல,

பொழியாய் மழை - மழையே நீ பொழிவாயாக.

சுருக்கி - தொகுத்து; வற்றச்செய்து

இட்டிடை - மிகச் சிறிய இடை
சிலைகுலவி - வில்லை வளைத்து.

விளக்கம்

'மழையே! மழையே! பொழிவாயாக' என்கிறார்கள் கன்னிப் பெண்கள்.

கடல் நீரைச் சுருக்கி வானத்தின்மேல் ஏறிக்கொள்ள வேண்டுமாம்; அந்தக் கருநீல நிறம் அன்னையின் திருமேனியை நினைவூட்ட வேண்டுமாம்.

நம்மை ஆட்கொண்ட அம்மையின் சிற்றிடைபோல மின்னல் மின்னிப் பொலிய வேண்டுமாம்.

இடி இடிக்குமே, அந்த இடி அம்மையின் காலணியாகிய சிலம்பின் ஒலிபோல் ஒலிக்க வேண்டுமாம்.

வசீகரமான வானவில் அம்மையின் அழகிய புருவத்தை நினைவூட்ட வேண்டுமாம்.

அன்னையினின்றும் பிரிதல் இல்லாத தலைவனாகிய இறைவனுடைய மெய்யன்பர்களுக்கு அம்மை அருள் செய்ய வேண்டுமென்று திருவுள்ளம் கொண்டு நமக்குக் கண்முன் இனிய அருளைப் பொழிகின்றாளாம். அந்த அருள்போல மழையே பொழிவாய் என்கிறார்கள்.

இறைவியின் அருள் மழைபோல் இறங்கி வருகிறது என்பது குறிப்பு. அந்த அருள்போல மழை பெய்யவேண்டும் என்ற கன்னியர் விருப்பத்தை வெளியிடுகின்ற இந்தப் பாட்டு மிகவும் வசீகரமான கவிதை யாகும்.

இந்த மழைப் பாட்டுடன் திருப்பாவையில் ஆண்டாள் பாடியிருக்கும் மழைப் பாட்டை ஒப்பிடுக:

ஆழி மழைக்கண்ணா! ஒன்றும் நீகை கரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய் கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்று அதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்.

ஆரமுதைப் பாடிப் பூம்புனல் ஆடுதல்

செங்கண் அவன்பால்,
திசைமுகன்பால், தேவர்கள்பால்
எங்கும் இலாததோர்
இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி
நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள்
தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம்
தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை,
அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப்
பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து
ஆடேலோர் எம்பாவாய். (17)

பதவுரை

செங்கண் அவன்பால் - சிவந்த கண்களையுடைய திருமாலிடத்தும்,
திசைமுகன் பால் - நாலுதிசைக்கும் நாலுமுகங்களை உடைய பிரமனிடத்தும்,
தேவர்கள் பால் - இந்திரன் முதலான தேவர்களிடத்தும்,
எங்கும் இலாததோர் இன்பம் - வேறு எவ்வுலகத்துள்ளாரிடத்தும் இல்லாததாகிய ஒப்பற்ற இன்பம்
நம் பாலதா - நம் இடத்ததாக,
கொங்கு உண் கருங்குழலி - மணத்தை உட்கொண்ட கூந்தலை உடைய பெண்ணே!
நம் தம்மைக் கோதாட்டி - நம்மை மாசுகளைந்து சீராட்டி,
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி - இவ்வுலகத்தில் நம்முடைய வீடுதோறும் எழுந்தருளி,
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை - தனது செந்தாமரைபோன்ற அழகியதிருவடிகளை நமக்குத் தந்தருளுவதைத் தொண்டாகக் கொண்டிருப்பவனும்,
அங்கண் அரசை - அழகிய கண்களை உடையவனும்,
அடியோங்கட்கு ஆரமுதை-அடியவர்களாகிய நமக்குக் கிடைத்ததற்கு அரிய அமுதமாக இருப்பவனுமாகிய
நங்கள் பெருமானைப் பாடி-எங்கள் பெருமானைப் பாடி
நலந்திகழப் பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடு- நன்மை திகழத் தாமரைப் பொய்கையில் பொலிகின்ற

தண்ணீரில் பாய்ந்து நீராடுவோமாக.
சேவகன் - தொண்டு செய்பவன்; வீரன்.

ஆர் அமுது- கிடைத்தற்கரிய அமிர்தம்; நிறைந்த அமிர்தம்.

விளக்கம்

'மணம் நிறைந்த கருங் கூந்தலை உடையவளே!' என்று ஒருத்தியைக் குறிப்பிட்டு அக்கூட்டத்தினர் கூறுவதாக அமைந்திருக்கிறது இப்பாட்டு. இந்த ஒருத்தியைத் 'தலைமகள்' என்று கருதுவோர் உண்டு.

திருமால் இடத்தும் நான்முகன் இடத்தும் தேவர்கள் இடத்தும் வேறு உலத்தார் இடத்தும் இல்லாத ஒப்பற்ற இன்பம் நம்மிடம் காணப்படுகிறது என்று சொல்லும்படி நம்மைக் கோதாட்டிச் சீராட்டுகிறான் இறைவன் என்கிறார்கள்.

அவன் இவ்வுலகத்திலே நம்முடைய இல்லங்கள் தோறும் எழுந்தருளித் தன்னுடைய செங்கமலப் பொற்பாதத்தை நமக்குத் தந்தருளுகிறானும். அதை ஒரு தொண்டாக மேற்கொண்டு செய்கிறானும்.

எனினும் அவனுடைய அழகிய நோக்கைப் பார்த்ததும் அவனை 'அங்கண் அரசு' என்று சொல்லி அடிமை செய்ய வேண்டுமென்று ஆசை ஏற்படுகிறதாம். அந்த அழகிய நோக்கிலே அப்படி அற்புத அருளைக் காட்டுகிறானும்.

அடியவர்களாகிய நமக்கு ஆரமுதம் என்றும் தோன்றுகிறானும். இத்தகைய எங்கள் பெருமானைப் பாடவேண்டும் என்கிறார்கள். பாடி அந்த நலந் திகழத் தாமரைப் பொய்கையில் பூம்புனல் பாய்ந்து ஆடவேண்டும் என்கிறார்கள்.

'அங்கண் அரசு' என்பதில் 'அருள் நோக்கே அழகு நோக்கு' என்ற குறிப்பும் உண்டு.

'அடியோங்கட்கு ஆரமுது' என்பதில் 'அனுபவிக்க அனுபவிக்கத் தெவிட்டாத அமிர்தம் இறைவன்' என்ற குறிப்பும் உண்டு.

பெருமை வாய்ந்தவன் பெருமான். அவனைப் பாடுவதே நலம். அவனைப் பாடி அந்த நலம் திகழப் பூம்புனல் பாய்ந்து ஆடுவதே பொலிவுதரும் என்ற புதைபொருளையும் 'நலம் திகழப் பூம்புனல் பாய்ந்து ஆடு' என்பதில் கண்டு கொள்ளலாம்.

உள்ளுறை

'எங்கும் இலாத இன்பம்' என்று குறிக்கப்படுவது பேரின்பம் என்பர். நம்மைப் போகங்களாகிய குற்றங்களுக்கு உட்படுத்தி, நமக்கு நல்லறிவு பிறந்ததும் இவ்வுலகிலேயே நமது உள்ளக் கோயில்களில் இறைவன் எழுந்தருளிக் கருணை நோக்கால் வசப்படுத்திக் கோதாட்டிச் சீராட்டுகிறான். அழுக்கு வஸ்திரத்தைத் தூய்மை செய்ய உவர்மண் போன்ற மாசுகளை அந்த வஸ்திரத்துடன் கலப்பதுபோலத்தான் போகங்களுக்கு நம்மை இறைவன் உட்படுத்திக் கோதாட்டுவதும்.

அண்ணாமலையான் கழல்பாடி நீராடுதல்

அண்ணா மலையான்
அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின்
மணித்தொகைவீறு அற்றாற்போல்,
கண்ணார் இரவி
கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித்
தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய்
அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி
இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய்
நின்றான் கழல்பாடிப்
பெண்ணே!இப் பூம்புனல்பாய்ந்(து)
ஆடேலோர் எம்பாவாய். (18

பதவுரை

அண்ணுமலையான் அடிக்கமலம் சென்று இறைஞ்சும்- திருவண்ணுமலையில் எழுந்தருளி யிருக்கும் இறைவனுடைய திருவடித் தாமரைகளில் போய் வணங்கும்

விண்ணோர் முடியின் மணித்தொகை வீறு அற்ருற் போல்- தேவர்களுடைய முடி மணிகளின் கூட்டம் பொலிவிழந்து ஒளி மழுங்கிக் காண்பது போல்

கண்ணுர் இரவி கதிர் வந்து கார் கரப்ப- உலகத்திற் கெல்லாம் கண்ணுக அமைந்த சூரியனின் கதிர்களை எதிர்ப்பட்டு இருள் மறையவும்

தண்ணுர் ஒளி மழுங்கித் தாரைகள் தாம் அகல - நட்சத்திரக் கூட்டங்கள் தம்முடைய தன்ளுெளி மழுங்கி மறைய,

பெண்ணுகி ஆணுய் அலியாய்- பெண்ணுகியும் ஆணுகியும் அலியாகியும்

பிறங்கு ஒளிசேர் விண்ணுகி மண்ணுகி - ஒளி விளங்கும் விண்ணுகியும், நிலமாகியும்

இத்தனையும் வேருகி-இவையெல்லாம் வேருகத் தான் இவ்வளவு பொருள்களிலும் வேறு பொருள் ஆகியும்

கண் ஆர் அமுதமுமாய்- கண் நிறைந்த அமுத வடிவாகியும்

நின்ருன் கழல் பாடி- நிலைபெற்றவனுடைய திருவடியைப் பாடி

பெண்ணே! இப் பூம்புனல் பாய்ந்து ஆடு- பெண்ணே! அழகான இந்நீர்நிலையில் குதித்து நீராடுவோமாக.

வீறு- தனிச் சிறப்பு
'கண் ஆர் இரவி' - இடங்கள் தோறும் நிறைந்திருக்கிற சூரியன் என்றும் பொருள் கொள்ளலாம்.
'கண் ஆர் அமுதம்' கண்ணால் பருகும் அமுதம்.

விளக்கம்

தலைவியே! திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் இறைவனுடைய திருவடியைச் சார்ந்து விண்ணோர் வணங்கும்போது அவர்களுடைய முடிமணிகளான இரத்தினக் கூட்டங்கள் இறைவனுடைய திருவடி ஒளிக்குமுன் தமக்குள்ள பொலிவை இழந்து மழுங்கிக் காணப்படுமாம்.

அதுபோல உலகத்திற்கெல்லாம் கண்ணான சூரிய ஒளிக்கு முன் இருள் மறைய, நட்சத்திரக் கூட்டங்கள் ஒளி மழுங்கிப் போகின்றன.

இத்தகைய காலை வேளையில், பெண்ணாகியும் ஆணாகியும் அலியாகியும் வானகமாகியும் மண்ணகமாகியும், இவையனைத்தும் வேறாகத் தான் அவற்றினின்று வேறாகியும் உள்ள இறைவனைப் பாடவேண்டும் என்கிறார்கள்.

அத்தகைய இறைவன் கண்ணால் பருகும் அமுதமாக வந்து நிற்கிறானும், அருள் செய்வதற்காக. அவனுடைய திருவடியைப் பாடிப் பொலிவு பெற்று அந்தப் பொலிவுடன் இந்த அழகான நீர்நிலையில் குதித்து நீராடுவாயாக. நாங்களும் உன்னோடு பாய்ந்து நீராடுவோமாக என்கிறார்கள்.

திருவண்ணாமலை இங்கே சிறப்பித்துக் கூறப்படு

வது கவனிக்கத் தக்கது. திருவெம்பாவை திருவண்ணு மலையில் இயற்றப்பட்டது என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

உள்ளுறை

கதிர் ஒளிக்கு முன் இருள் விலகுவதுபோல் சிவ ஞான ஒளிக்கு முன் மல இருள் விலகி விடும் என்பதும், சூரிய ஒளியில் நட்சத்திர ஒளி அடங்கிப் போவது போல் இறையறிவில் உயிர் அழுந்தி அறியும் என்பதும் சித்தாந்தக் குறிப்பு.

பெண்ணும் ஆணும் அலியும் விண்ணும் மண்ணும் ஆகிய எல்லாப் பொருள்களிலும் கலந்திருப்பதால் அவையாகிருன் இறைவன். தலைவனுக இருந்து அவற்றை இயக்குவதால் அத்தனை பொருள்களுக்கும் வேருகவும் இருக்கிருன். அதே இறைவன் நமக்கு ஆரமுதமாகி இருப்பதால், உடனுகியும் யிருக்கிருன்.

அன்பர் பணிக்கு
ஆளாக்க வேண்டுதல்

உங்கையிற் பிள்ளை
உனக்கே அடைக்கலம்என்று
அங்(கு)அப் பழஞ்சொல்
புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான்!
உனக்கொன் றுரைப்போம்கேள்!
எம்கொங்கை நின்அன்பர்
அல்லார்தோள் சேரற்க;
எங்கை உனக்கல்லா(து)
எப்பணியும் செய்யற்க;
கங்குல் பகல்எம்கண்
மற்றொன்றும் காணற்க;
இங்கிப் பரிசே
எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழில்என் ஞாயிறு?
எமக்கேலோர் எம்பாவாய். (19)

பதவுரை

உங் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று அங்கு அப் பழஞ்சொல் - உன் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்ற அந்தப் பழமொழியை

புதுக்கும் எம் அச்சத்தால்- எமது அச்சத்தால் புதுப்பிக்கும் நாங்கள்

எங்கள் பெருமான் உனக்கு ஒன்று உரைப்போம் கேள்- எங்கள் பெருமானே! உனக்கு நாங்கள் ஒரு விண்ணப்பம் செய்துகொள்கிறோம்; அதை நீகேட்டருள்வாயாக:

எங் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க- நாங்கள் அன்பர் அல்லாதார் தோள்களைத் தழுவாது இருப்போமாக;

எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க- எம் கைகள் உனக்கு அன்றி வேறு எவருக்கும் எத்தகைய தொண்டும் செய்யாது ஒழிக.

கங்குல் பகல் எங்கண் மற்றொன்றுங் காணற்க-இரவும் பகலும் எங்கள் கண்கள் உன்னையன்றி வேறொரு பொருளையும் காணாது ஒழிக.

இங்கு இப்பரிசேஎமக்கு எம்கோன் நல்குதியேல்-இந்த உலகத்திலே எங்களுக்கு இத்தன்மையையே நீ அருள் செய்வாயாகில்,

எங்கு எழில் என் ஞாயிறு எமக்கு- எங்களுக்குச் சூரியன் எந்தத் திசையில் உதயம் செய்தாலும் ஆவது என்ன?

'உன்கை' என்பது 'உங்கை'என வந்திருக்கிறது. எம்பி' என்பது போல. எதுகை நோக்கித் திரிந்தது.

விளக்கம்

'உங்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்னும் பழமொழியை எங்களுக்கு நிகழ்ந்தபயத்தால் புதுப்பித்து உன்னிடம் முறையிட்டுக் கொள்கிறோம். மிகைப்பட்ட வார்த்தை தான்; எனினும் விண்ணப்பம் செய்துகொள்ள விரும்புகிறோம் என்கிறார்கள்.

'எங் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க' என்பதைத்தான் விண்ணப்பத்தின் முதற் பகுதி யாக்குகிறார்கள். 'உன் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்பது போலத்தானே இதுவும்.

இந்த விண்ணப்பத்தின் இறுதிப் பகுதி 'அல்லும் பகலும் எங்களுடைய கண்கள் உன்னைக் காண் பதன்றி வேறொன்றையும் காணற்தொழிக' என்பது.

இவ்விண்ணப்பத்தின் இடைப்பகுதியாக அமைந் திருக்கிறது 'எம் கை உனக்கு அல்லாது எப்பணியும் செய்யற்க' என்பது.

இவ்வுலகில் எங்களுக்கு இந்தத் தன்மையையே நீ அருள் செய்வாயாகில், அந்த அருட் செல்வம் பெற்ற எங்களுக்கு ஒரு குறையும் இல்லை. சூரியன் கிழக்கே உதயமாகாமல் வேறு திசைகளில் உதித்தா லும் நாங்கள் அச்சம் கொள்ளப் போவதில்லை என்கிறார்கள்.

இந்தப் பரிசினை மார்கழி நீராடிய எங்களுக்கு அந்த நோன்பின் முடிந்த பயனை நாங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு நீஅருள் செய்யவேணும் என்பது இந்தப் பெண்கள் கூட்டத்துப் பிரார்த்தனை.

உள்ளுறை

அறிவில்லாத பொருள் உடையானுக்கு உடைமை யென்றும், அறிவுள்ள பொருள் உடையானுக்கு அடிமை என்றும் சொல்லவேண்டும். அடிமைக்கு வேண்டியது அடைக்கலக் காவல். பசுக்கள் என்று சொல்லப்படும் ஆன்மாக்கள் எல்லாம் பசுபதியாகிய ஆண்டவனுக்கு அடைக்கலப் பொருள்.

இந்தப் பிரார்த்தனைச் செய்யுளைத் திருவெம்பாவையின் உயிர் நிலைச் செய்யுளாகக் கொள்ளலாம். நல்ல கணவரை அடையவும், நாடு செழிக்கவும், கன்னிப் பெண்கள் நோற்கும் நோன்புதான் பாவை நோன்பு.

இந்தப் பிரார்த்தனையின் முப் பகுதிகள்: (1) நல்ல கணவரை அடையவேண்டும்; (2) சிவபெருமானுக்கே பணி செய்ய வேண்டும்; (3) காண்பனவெல்லாம் பெருமான் காட்சிகளாகவே அமைய வேண்டும்.

ஐந்தொழில் உயிர்களுக்குக் காப்பு

போற்றி அருளுகநின்
ஆதியாம் பாதமலர்

போற்றி அருளுகநின்
அந்தமாம் செந்தளிர்கள்

போற்றியெல் லாவுயிர்க்கும்
தோற்றமாம் பொற்பாதம்

போற்றியெல் லாவுயிர்க்கும்
போகமாம் பூங்கழல்கள்

போற்றியெல் லாவுயிர்க்கும
ஈறும் இணையடிகள்

போற்றிமால் நான்முகனும்
காணாத புண்டரிகம்

போற்றியாம் உய்யஆட்
கொண்டருளும் பொன்மலர்கள்

போற்றியாம் மார்கழிநீர்
ஆடேலோர் எம்பாவாய். (20)

பதவுரை

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர் - ஆதியாக உள்ளன உன் திருவடிமலர்கள். அத்திருவடி மலர்களை எமக்கு அருளி எங்களைப் பாது காப்பாயாக;

போற்றி அருக நின் அந்தமாம் செந்தளிர்கள் - உன் திருவடி மலர்கள் எல்லாப் பொருள்களுக்கும் ஆதியாக இருப்பதுபோல் அந்தமாகவும் இருக்கின்றன. அந்தச் செவ்விய திருவடிகளால், எம்மைக் காத்து எமக்கு அருள்வாயாக,

போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்- எல்லா உயிர்களும் தோன்றுவதற்கு இடமாகிய உன் பொன்போன்ற திருவடிகள் எம்மைக் காத்தருள்க; அத் திருவடிகளுக்கு வணக்கம்;

போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்- உயிர்களுக்கெல்லாம் ஏற்றவாறு போகங்களை அருளும் பொலிவினை உடைய கழல்களை அணிந்த உன் திருவடிகள் எம்மைக் காக்க; அத்திருவடிகளுக்கு வணக்கம்,

போற்றி எல்லா உயிர்க்கும் ஈறும் இணையடிகள் - எல்லா உயிர்களும் ஒடுங்குவதற்குக் காரணமான உன் அடியிணைகளுக்கு வணக்கம்; அத்திருவடிகள் எம்மைக் காக்க,

போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம் - திருமாலும் பிரமதேவனும் காண இயலாத திருவடிகள் எம்மைக் காக்க. செந்தாமரை போன்ற அத்திருவடிகளுக்கு வணக்கம்.

போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள் - அவ்வளவு அருமையான பொன் மலர்கள் போன்ற திருவடிகள் நாங்கள் உய்யும்பொருட்டு வந்து ஆட்கொண்டருளின; எனவே அத்திருவடிகளுக்கு வணக்கம்.

போற்றி யாம் மார்கழி நீர் ஆடு - நாம் நீராடுகின்ற இந்த மார்கழி நீருக்கும் வணக்கம்; இம்மார்கழி நீர் எம்மைக் காக்க.

விளக்கம்

இறைவனை நோக்கி, 'நீ எங்களுக்கு உன் திருவடிகளை அருளுக; நாங்கள் அத்திருவடிகளையும் மார்கழி நீரையும் போற்றிப் பாடுவோம், நீராடுவோம்' என்பது இப்பாட்டின் கருத்து.

இறைவனே! உன் பாதமலர்கள் எல்லாப் பொருள்களுக்கும் எல்லாத் தோற்றங்களுக்குப் ஆதியாக இருக்கின்றன. அத்திருவடிமலர்களை எங்களுக்கு அருளி எம்மைப் பாதுகாப்பாயாக என்கிறார்கள்.

'ஆதியாம் பாதமலர்' என்றவர்கள் அவற்றையே 'அந்தமாம் செந்தளிர்கள்'என்றும் குறிப்பிடுகிறார்கள். அந்தச் செந்தளிர்களை எமக்கு அருளி எம்மைப் பாதுகாப்பாயாக என்கிறார்கள்.

'எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்' என்று சொல்லி, பலவகைப்பட்ட உயிர்களுக்குப் பிறப்பிடமாக அப் பொற் பாதத்துக்கு வணக்கம்' செலுத்துகிறார்கள்.

'எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள் என்று சொல்லி, உயிர்களுக்கெல்லாம் இசைந்தவாறு

போகங்களை அருளும் அத்திருவடிகளுக்கு வணக்கம் செலுத்துகிறார்கள்.

தோன்றிப் போகம் நுகர்ந்து உயிர்கள் ஒடுங்குவதற்கும் காரணமாக உள்ளன இறைவன் இணையடிகள். அந்த இணையடிகளைப் போற்றுகிறார்கள்.

தோற்ற ஒடுக்கங்களுக்குக் காரணமான திருவடிகளைத் திருமாலும்பிரமதேவனும்கூடக்கண்டதுமில்லை, அறிந்ததுமில்லை என்று சொல்லி அத்திருவடிகளுக்கு வணக்கம் செலுத்துகிறார்கள்.

அத்தகைய அருமையான பொன்மலர்கள் நாங்கள் உய்யும் வண்ணம் அடிமைகொண்டு இன்பம் தந்தனவே, அத்திருவடிகளுக்கு வணக்கம் என்கிறார்கள்.

இப்படிப் பிறவியின் பயனை அடைவதற்குக் காரணமாகிய மார்கழி நீருக்கும் வணக்கம் செலுத்துகிறார்கள்.

உள்ளுறை

அறுவகைக் காவலைக் குறித்த பிரஸ்தாபம் இப்பாட்டில் வருகிறது. ஐந்தொழிலுக்கும் உரிய சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்பது தேர்ந்த கருத்து. இப்பாட்டில் 'எட்டுப் போற்றி'யைக் காண்கிறோம்.

திருப்பள்ளியெழுச்சி

[மாணிக்கவாசகர் அருளியது]

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை உடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. (1)

அருணனிந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணும்
திரணிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. (2)

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாயெமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. (3)

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கைய ரொருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே (4)

பூதங்கள் தோறுநின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்மரி யாயெங்கள் முன்வந்
தேதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. (5)

பப்பற வீட்டிருந் துணரும்நின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றூரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. (6)

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இது அவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னு
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. (7)

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. (8)

விண்ணகத் தேவரும் நண்ணவு மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தா யுலகுக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. (9)

புவனியிற் போய்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவ னாசைப்
படவுநின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. (10)

இதர நூல்கள்

உதயம் கி. வா. ஜகந்நாதன் தொகுத்தது. 0 6

நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடிய திருப்பள்ளி யெழுச்சிகள், பாரதியார் பாடிய பாரதமாதா திருப் பள்ளியெழுச்சி ஆகியவற்றின் அழகிய தொகுதி.

கந்தபுராணச் சுருக்கம் (2தொகுதிகள்)

ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் எழுதியது.

யுத்த, தேவ, தக்ஷ காண்டங்கள் 2 4

அசுர, மகேந்திர காண்டங்கள் 1 14

மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில் 5 0

சோ. சிவபாத சுந்தரம் எழுதியது.

மாணிக்கவாசகரைப்போல, சிவபாத சுந்தரமும் தமிழ் நாட்டுக் கோவில்களுக்கு யாத்திரை செல்கிறார். அங்கே தாம் கண்ட அநுபவங்களை அழகாகச் சொல் கிறார். கலையாராய்ச்சி, பிரயாண அனுபவம், பக்தி சரித்திரம் எல்லாம ஒருங்கே காணக்கூடிய சிறந்த நூல் இது.

சிவநேசச் செல்வர்கள் பி. ஸ்ரீ. எழுதியது

இரண்டு பாகங்கள் 6 0

யோக வாசிஷ்டம் 5 0

(முதல் ஐந்து பிரகரணங்கள்)

ஞான மார்க்கத்தைப்பற்றி வசிஷ்டர் அருளிய சிறந்த மனத்தத்துவ நூல். எஸ். வி. கணபதி நன்றாகத் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்.

துளசி ராமாயணம் 1 8

(அயோத்தியா காண்டம்)

கம்பனுடைய காவியக் கருத்துக்கு இணையாகப் பக்திச் சுவை மிளிர, பக்த கவி துளசிதாசர் எழுதிய பிரசித்த காவியம். ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள் மொழி பெயர்த்தது.

பெரியாழ்வார் — 3 0

திருமாலுக்குப் பல்லாண்டு பாடிய புதுவைக்கோன் பட்டர்பிரானுடைய கவிதையும் வாழ்க்கையும், பி. ஸ்ரீ. அவர்களின் அருமையான ஆராய்ச்சி.

ஔவையார் — பி. ஸ்ரீ. — 1 0

ஆண்டாள் — பி. ஸ்ரீ. — 1 4

திருமாலுக்குப் பூமாலையும் அடியார்களுக்குப் பாமாலையும் தந்து தமிழிலக்கியத்தின் சுடரொளியாக விளங்கும் ஆண்டாளின் வாழ்க்கை வரலாறு.

திருப்பாவை — 1 8

வைஷ்ணவ ஆசிரியர்கள் திருப்பாவைக்குத் தித்திக்கும் தீஞ்சுவை நடையில் பல அரிய வியாக்கியானங்கள் இயற்றி யிருக்கிருர்கள். அவற்றின் சாரத்தை அள்ளித் தருகிருர். பி. ஸ்ரீ.

திருவெம்பாவை பி. ஸ்ரீ. — 1 8

வழிகாட்டி — 3 0

கி. வா. ஜகந்நாதன் எழுதிய திருமுருகாற்றுப்படை விளக்கம். கதைபோலச் செல்லும் நடை. தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரின் பாராட்டுப் பெற்றது.

உத்தரராம சரிதம் — 1 8

கனம் க. சந்தானம் எம். ஏ., பி. எல். பவபூதியின் அழகியநாடகத்தை மொழிபெயர்த் திருக்கிருர்.

திருப்புகழ்ப் பாராயணத் தவநெறித் திருமுறை — 1 4

மகாபாரதக் கதைகள்—பி. ஸ்ரீ.

இசை மணிமாலை — பெ. துரான் — 3 0

ரத்தனமாலை — பாபநாசம் சிவன் 2 0